மாநகர சபை யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை (31.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 317




## மக்கள் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(கிளிநொச்சி)

பொதுமக்களின் இலக்குகள் மீது படையினர் நடத்திவரும் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வான்படையின் குண்டு வீச்சு வானூர்திகள் திடீரென வள்ளிபுனம் வான்பரப்புக்குள் இன்று (நேற்று) வியாழக்கிழமை காலை 9.30 மணி யளவில் பிரவேசித்து கரித்தாஸ்-கியூடெக் நிறுவனங்களினால் நிர்மாணிக்கப் பட்ட மக்கள் குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமான அகோரக் குண்டுவீச்சுக்களை நடத்தின. இதன்போது ஒரு மாணவன் கொல்லப் பட்டும் எட்டுப்பேர் காயமடைந்தும் உள்ளனர்.

இக் குண்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவை கைப்பற்றியதாக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முக்கிய இராணுவ முகாம் அமைந்திருந்த நாச்சிக்குடா பிரதேசத்தை படையினர் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இராணுவத்தின் 58-வது படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் மூன்று முனைகளினூடாக நாச்சிக்குடா பகுதிக்குள் பிரவேசித்து புலிகளின் முக்கிய நிலைகளை தகர்த்துள்ளனர்.

முதலாவது குழு பல்லவராயன்கட்டு தெற்குப் பிரதேசத்திலிருந்து மன்னார் -பூநகரி பாதையை ஊடறுத்து ஏ-32 பாதையூடாக வடக்கிலிருந்து தெற்கிற்கு நகர்ந்துள்ளது.

அடுத்த பிரிவு நாச்சிக்குடாவின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி முன்னேறியுள்ளது.

மூன்றாவது குழு (12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் விமானத் தாக்குதலால் நாளாந்தம் 24 மில்.ரூபாய் நட்டம்

## மின்சார சபை வட்டாரம் தகவல்

(கொழும்பு)

களனி திஸ்ஸ மின் உற்பத்தி நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய விமானத் தாக்குதலால் ஏற்பட்ட சேதத்தினால் 275 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் நாளாந்தம் 24 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்ஸாமில் தொடர் குண்டுவெடிப்பு 60 பேர் பலி, 150 பேர் படுகாயம்

(புதுடில்லி)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் நேற்றுக்காலை ஏற்பட்ட தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 60 பேர் கொல்லப்பட்டனர். இந்த குண்டு வெடிப்புக்கள், தலைநகர் குவாஹாட்டியில் நடந்துள்ளன. அவற்றில் 150க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தார்கள்.

முற்பகல் 11 மணிக்குப் பிறகு குவாஹாட்டி, கோக்ரஜார், பார்பேடா சாலை மற்றும் பொங்கைகான் ஆகிய இடங்களில் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன.

குவாஹாட்டியில் துணை கமிஷனர் அலுவலகம் முன்பு நடைபெற்ற முதல் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 6 பேர் கொல்லப்பட்டார்கள். மாநில தலைமைச் செயலகம் அருகே நடைபெற்ற இரண்டாவது சம்பவத்தில் ஐந்துபேர் கொல்லப்பட்டார்கள்.

மத்திய குவாஹாட்டியில் பான்பஜார் பகுதியில் நடந்த குண்டுவெடிப்பில் நான்குபேர் கொல்லப்பட்டார்கள். அதேபோல் சுமார் பத்துக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் ஜனநாயகத்தை ஏற்படுத்த அரசும் புலிகளும் பேச்சில் ஈடுபடவேண்டும்

### முதலமைச்சர் கருணாநிதி வேண்டுகோள்


(சென்னை)

இலங்கையில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இங்கு மேலும் கருத்து தெரிவித்ததாவது, இலங்கை தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்பதே திராவிட முன்னேற்ற கழகத்தின் இன்றைய நிலைப்பாடாகும்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அன்று கொண்டிருந்த கொள்கையையே தொடர்ந்தும் தி.மு.க. பேணி வருகிறது.

இலங்கையில் யுத்தம் இல்லாத சூழ்நிலை ஏற்படவேண்டும். அந்த அமைதியை உருவாக்குவது யாராக இருப்பினும் அவர்களை ஆதரிப்பதற்கு (12ஆம் பக்கம் பார்க்க)



## வள்ளிபுனத்தில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள வள்ளிபுனத்தில் விமானப்படை நடத்திய குண்டுத் தாக்குதலில் (12ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சை விஞ்ஞானம் (வினாத்தாள்)

தரிசனம்

## பயிற்சி முகாம் மீது விமானத் தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவு பயிற்சி முகாம்கள் மீது நேற்றுக் காலை விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படை ஊடகப்பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புக்கு வடமேற்காக (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிவிளாங்குளத்தில் முன்னகர்வு முறியடிப்பென புலிகள் தெரிவிப்பு

வன்னிவிளாங்குளம் பகுதியில் படையினர் மேற்கொண்ட இருமுனை முன்னகர்வுகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளன. இதில் 5 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்னிவிளாங்குளம் பகுதியில் நேற்று காலை 9.30 மணியளவில் எறி கணை மற்றும் கனரக போர்க்கலங்களின் சூட்டாதரவுடன் படையினர் இரு முனைகளில் விடுதலைப் புலிகளின் முன்னரண்களை கைப்பற்றும் முயற்சியினை மேற் கொண்டனர்

இம் முன்னகர்வுகளை முறியடிக்கும் தாக்குதல்களை புலிகள் நேற்று மு.ப. 11.30 மணிவரை நடத்தி படையினரின் முயற்சியினை முறியடித்தனர். புலிகளின் முறியடிப்புத் தாக்குதலையடுத்து படையினர் தமது நடவடிக்கைகளை கைவிட்டு பின்வாங்கிச் சென்றனர்.

இத்தாக்குதலின் போது படையினரிடமிருந்து படையப் பொருட்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## தமிழ்நாட்டில் இன்று கதவடைப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்தும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தியும் தமிழகமும் முழுவதும் இன்று கதவடைப்பு நடத்தப்படுகின்றது.

இப்போராட்டத்துக்கு அனைத்து வணிகச் சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

வணிகச் செயற்பாடுகள் மட்டுமே இன்று செயற்படாது எனவும் ஏனைய அரச அலுவலகங்கள் செயற்படும் எனவும் வணிகர் சங்கங்கள் அறிவித்துள்ளன. (ச)

# மாணவர்களை இலட்சியத்தினூடாக வழிநடாத்தி உயர்வடையச் செய்ய கல்விச் சமூகம் முன்வரவேண்டும்

## வட்டு. இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் அரச அதிபர்

(சாவகச்சேரி)

கற்பித்தலிலும் சரி பிற செயற்பாடுகளிலும் சரி திறமையைக் காட்டும் மாணவர்களை பரிசில்கள் வழங்கி கௌரவிப்பதனூடாக அவர்களை மேலும் உற்சாகப்படுத்த முடியும். அதேவேளை அத் திறமையை வெளிக்கொண்டு வராத மாணவர்களை புறந்தள்ளி விடாது மறு சந்தர்ப்பங்களில் நீங்களும் திறமையை வெளிக்காட்டி பரிசில்களை தட்டிச் செல்லவேண்டும் என்ற மனப்பாங்கை உருவாக்கி அவர்களை அந்த இலட்சியத்தினூடாக வழிநடாத்தி உயர்வு பெறச் செய்ய கல்விச் சமூகமும் பெற்றோரும் பாடுபட வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மையில் சித்தன்கேணி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பரிசில் நாள் மற்றும் நிறுவுனர் நினைவு நாள் நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி ஜெகதீஸ்வரி அருள்மயம் தலைமையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தனதுரையில் இக்கட்டான சூழ்நிலையிலும் நாம் ஓர் இலட்சியத்தை முன் வைத்து சேவை செய்வோமாக. இருந்தால் நிச்சயம் அச் சேவையின் நல்ல பலனை மக்கள் பெறுவார்கள்.

ஆகவே நாம் எல்லோரும் நல்ல சிந்தனையுடன், நேர்மையுடன், திடசங்கற்பத்துடன் சேவையாற்றின் வெற்றிகள் குவிந்து கொண்டே செல்லும்.

மக்களுக்கும் சமூகத் திற்கும் அரிய பல நன்மைகளை செய்ய லாம் என்றார். திருமதி பரமேஸ்வரி கணேஸ் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (ஓ-29)

## நினைவுப் பேருரை

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் நடாத்தும் நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு திருச்சபை மண்டபத்தில் இடம் பெறும்.

நிகழ்வில் முன்னை நாள் அதிபர்கள் பெயர் பட்டியல் திரைநீக்கம செய்தல் இடம் பெறும். ஆங்கில ஆசிரியர் சி. இரத்தினம் "ஹாட்லியின் வரலாற்றில் அதிபர்கள் ஐவர்" எனும் பொருளில் அதிபர்கள் நினைவு நாள் உரையை நிகழ்த்துவார். பேராசிரியர் அ.துரைராசா நினைவுப் பேருரை மற்றும் பல்கலைக்கழக அனுமதி முறை சமூக நீதியானதா? எனும் தலைப்பில் பொருளியற்றுறைப் பேராசிரியரும் சட்டத்துறைத் தலைவருமான ப.சிவநாதன் உரையாற்றவுள்ளார். (ஓ)

## செபமாலையும் உண்ணாவிரதமும்

அமைதியான வாழ்விற்கும், வன்னி மக்களின் அவலங்கள் தீரவேண்டுமென்றும் மன்றாடி கடந்த 40 நாட்களாக் கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் தொடர் செபமாலை ஓதுதல் நிகழ்வு இடம் பெற்றது.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்ச்சியாக ஓதப்பட்டு வந்த இந் நிகழ்வின் இறுதிநாளான இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை உபவாசத்துடன் செபமாலை ஓதலும், நற்கருணை ஆசீர்வாதமும் இடம் பெறும் என கொய்யாத் தோட்ட கிறிஸ்து அரசர் ஆலய பங்குத் தந்தை அறிவித்துள்ளார். (ஓ)

## ஸ்ரீ அம்மா பகவான் ஐஸ்வரிய பூஜையும் வாராந்த சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நாளை சனிக்கிழமை ஸ்ரீ அம்மா பகவான் ஐஸ்வரிய பூஜையும் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகத்தின் "அம்மா பகவான் தரிசனம்" எனும் தலைப்பிலான சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து பக்தர்களும் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீ கல்வி ஆன்மீக மையம் கேட்டுக்கொள்கின்றது. (ஓ)

## நினைவு தினமும் உபகரணங்கள் வழங்கலும்

(மானிப்பாய்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சு. நடேசு, முன்னாள் பொது முகாமையாளர் அமரர் க. சந்திரராசா ஆகியோரின் நினைவுதினமும் முன்பள்ளிகளுக்கான பான்ட் வாத்தியக் கருவிகள் வழங்கலும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொத்தணியின் கலையரங்க மண்டபத்தில் வலிகாமம் கொத்தணி தலைவர் க. மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் க. கணேஷ், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம், வலி. தென் மேற்கு உதவி பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் இராசநாயகம், வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.குகனேசன், வலி. கொத்தணி முன்னாள் தலைவர் ஞானஏந்தல் இ. செல்வரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6)

## கந்தஷஷ்டி பெருவிழா

(மட்டுவில்)

தென் மட்டுவில் வேரற்கேணி திருவருள் மிகு கந்தசுவாமி திருக்கோவில் கந்தஷஷ்டி பெருவிழா 29 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தினமும் 2 மணியளவில ஸநபனாபிஷேகம், பூஜை, உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

நிகழ்வில் 4 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அபிஷேக பூஜையும், மாலை 3 மணிக்கு சூரன் போரும் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகமும் இடம் பெறும்.

5ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அபிஷேகம், பூஜை, சண்முகப் பெருமானுக்கு திருக் கல்யாண உற்சவம் என்பன நடைபெறும். (ஓ-4)




## கந்தசஷ்டியை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவுகள்

வலிகாம பிரதேசத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் கந்தசஷ்டி சிறப்புச் சொற்பொழிவுகள் 29 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தினமும் மாலை 4 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

நிகழ்வில் 3 ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை மாலை4 மணிக்கு "நெஞ்சக் கனகல் நெகிழ்ந்துருக" எனும் விடயம் பற்றி சைவப்புலவர் நா.நவராஜ், 4ஆம் நாளான நாளை சனிக்கிழமை "உதித்தனன் உலகம் உய்ய" எனும் விடயம் பற்றி சிதம்பரநாதன் சசீவன். 5 ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை "கந்தனே கண் கண்ட தெய்வம்" எனும் விடயம் பற்றி சைவப்புலவர் எம்.பி.ஸ்ரீந்திரன், 6 ஆம் நாளான 3ஆம்திகதி திங்கட்கிழமை "தமிழ் மொழியும் தமிழ்க் கடவுளும்" எனும் விடயம் பற்றி சிவ உமாசுதன், 7 ஆம் நாளான 4ஆம் திகதி செவ்வாய்க் கிழமை "யாம் இருக்கப் பயம் ஏன்" எனும் விடயம் பற்றி மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளனர். (ஓ-18)

## கந்தஷஷ்டி விரதத்தை முன்னிட்டு ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் கந்தஷஷ்டி விரதத்தை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு ஆன்மீக தொடர் சொற்பொழிவு 29 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாயக்கிழமை "கந்தபுராணமும் ஆறுபடை வீடும்" என்னும் தலைப்பில் செஞ்சொற் செல்வர் இரா.செல்வவடிவேல் தொடர் சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் சென்ற மார்ச் மாதம் இடம்பெற்றிருந்த முன்பள்ளிக் கல்வி, அடிப்படை ஆங்கிலம், மனித உரிமைகளும் சமூக உரிமைகளும் ஆகிய கற்கை நெறிகளைப் பயின்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் கற்கைநெறியைப் பூரணப்படுத்தியோருக்கு சான்றிதழ்களை வழங்கவுள்ளார்.

புறநிலைப்படிப்புகள் அலகினால் நடத்தப்பட்டு நிறைவுபெற்ற மூன்று கற்கைநெறிகளைப் பயின்றவர்கள் அனைவரையும் நிகழ்வுக்கு வருகை தரும்படி இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## பகவத்கீதை உபந்நியாசம்

"கோண்டாவில் கிழக்கு, நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் பிரதி வெள்ளி தோறும் இடம்பெறும் ஆத்மீக நிகழ்வில் இன்று பிற்பகல் 4.30 மணிமுதல் 6 மணி வரை மாணவர்களின் கலை நிகழ்வும் கீதோபதேச வித்தகர், யாழ்.பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எஸ்.கே.என். தேவராஜாவின் பகவத்கீதை தொடர் உபந்நியாசமும் இடம்பெறும். ஆத்மீக ஆர்வலர்களைப் பயன் பெறு மாறு பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஆத்மீக சபா அறியத்தருகின்றது. (ஓ)


## தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தமிழ்மன்ற தலைவர் செல்வன் த.சஞ்சீவன் தலைமையில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் செல்வி மலர் சின்னையா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில், வரவேற்பு நடனம், பேச்சு, குழு இசை, கவியரங்கம், பட்டிமன்றம், நாட்டிய நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் இடமபெறவுள்ளன. (ஓ)



கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற யாழ்.கல்வி வலய விசேட தேவையுடைய மாணவிகளின் சித்திர ஆக்கத்திறன் கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை தொழில் வழி சிகிச்சையாளர் இ.கணேசலிங்கம் நாடாவெட்டி திறந்து வைத்து உரையாற்றுவதையும், கண்காட்சி நிகழ்வை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜலிங்கம், பிரதம விருந்தினர் மற்றும் வலய கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## பிரம்ம ஞானம்

விஸ்வாமித்திரருக்கு தன்னை எல்லோரும் பிரம்மரிஷி என்று அழைக்க வேண்டுமென்று ஆசை.

ஒருவருக்குப் பிரம்மஞானம் வந்து விட்டால் அதன் பின்புதான் அவரை பிரம்மரிஷி என்று அழைப்பார்கள்.

பிரம்ம ஞானம் அவ்வளவு சுலபமாக எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதை அடைவதற்காக விஸ்வாமித்திரர் காட்டுக்குப் போய் கடுமையான தவம் செய்தார். ஒரு நாள் தான் பிரம்ம ஞானம் அடைந்துவிட்டதாக நினைத்தார்.

உடனே பிரம்மரிஷி வசிஷ்டரிடம் போய் அவரை வணங்க முடிவு செய்தார். அந்தக் காலத்தில் ஒரு வழக்கம் இருந்தது. ஒரு பிரம்ம ரிஷியை இன்னொருவர் வணங்கினால் வணங்க வந்தவரும் பிரம்ம ஞானம் உள்வராக இருந்தால் பதிலுக்கு அவரை வணங்க வேண்டும்.

இல்லையானால், பிரம்மரிஷி தனது கைகளை உயர்த்தி ஆசீர்வாதம் பண்ண வேண்டும். இதை மனதில் வைத்துக் கொண்டுதான் விஸ்வாமித்திரர் வசிஷ்டரிடம் போனார். அவரை வணங்கினார். ஆனால் அவர் பதிலுக்கு இவரை வணங்கவில்லை. ஆசீர்வாதம் பண்ணினார்.

விஸ்வாமித்திரருக்குக் கோபம் வந்து விட்டது. இவ்வளவு கடுமையாக தவம் செய்தும் இவர் நம்மை பிரம்ம ரிஷியாக ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற கோபம். மறுபடியும் தவம் செய்ய ஆரம்பித்தார்.

ஒரு நாள் திடீரென அவருடைய இஷ்ட தெய்வம் காட்சி கொடுத்து, "விஸ்வாமித்திரா! நீ போய் வசிஷ்டரை வணங்கு! பதிலுக்கு அவர் உன்னை வணங்கவில்லை என்றால் உடனே அவருடைய தலை சுக்கு நூறாக வெடித்து விட வேண்டும் என்று சாபம் கொடு!" என்று சொல்லிவிட்டு அது மறைந்தது.

உடனே விஸ்வாமித்திரர் புறப்பட்டு போய் வசிஷ்டரை வணங்கினார். ஆனால் வசிஷ்டர் முன்புபோலவே கையைத் தூக்கி ஆசீர்வாதம் பண்ணினார். விஸ்வாமித்திரருக்கு கடுமையான கோபம் வந்து விட்டது.

"இவ்வளவு தவம் செய்தும் என்னை அங்கீகரிக்காத உங்களையும் உங்களைச் சேர்ந்தவர்களையும் என்ன செய்கிறேன் பார்!" என்று பொங்கி எழுந்தார்.

ஆனால் அந்த நேரத்தில் அவரிடம் திடீரென ஒரு மாற்றம். இவ்வளவு காலமும் அவர் செய்த தவமெல்லாம் சேர்த்து அவர் மனதில் நல்ல எண்ணங்கள் உண்டாகியதாம்.

அவர் யோசிக்க ஆரம்பித்தார். "சரி... இவர் நம்மை பிரரம்மஞானியாக ஏற்கவில்லை என்றால் என்ன? அதற்காக நான் ஏன் இவ்வளவு கோபப் படவேண்டும்? கோபத்தால் புத்திதடுமாறி சாபம் கொடுக்க இருந்தேனே...

கோபம் – பொறாமையெல்லாம் அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்யும் என்னிடம் உள்ள ஆத்மாதானே எல்லா உயிர்களிடமும் இருக்கும் என்று நினைத்தார்.

வெட்கத்துடன் தலையைக் குனிந்தபடியே நடக்க ஆரம்பித்தார். "கொஞ்சம் நில்லுங்க முனிவரே!" என்று ஒரு குரல் கேட்டது. பின்னால் வசிஷ்ட்டர் வந்து கொண்டிருந்தார்.

"நான் உங்களை வணங்க வேண்டாமா? உங்களை வணங்கி உங்கள் வணக்கத்தை ஏற்றுக் கொள்றேன்! உங்களுக்கு பிரம்மஞானம் வந்து விட்டது!" "பிரம்ம ரிஷியே! முதலில் உங்களிடமிருந்த ரஜோ குணம் நீங்கி சுத்த சத்துவ குணம் வந்துவிட்டது. அந்த ஒளி இப்பொழுது உங்கள் முகத்தில் தெரிகிறது! நீங்கள் உண்மையான பிரம்மஞானி தான்!" என்றார்.

வசிஷடர் தன் வாயாலேயே "பிரம்ம ரிஷி" என்று சொல்லி விட்டார்! வேறு என்ன வேண்டும்?

அந்தக்காலத்தில் வசிஷ்டர் வாயால் "பிரம்மரிஷி" என்று அவர் பட்டம் வாங்கியமாதிரி இந்தக்காலத்திலும் கடுமையான முயற்சிகள் செய்து நானும் வாங்கிவிட்டேன் என்றார் ஒரு குடும்பஸ்தர்.

"வசிஷ்டர் யார்?" என்று கேட்டேன்!

"என் வீட்டுக்காரி தான்!" என்றார்.

"அப்படி என்னதான் சொல்லி விட்டார்?" என்றேன்.

"சாம்பாரில் நான் போட்ட உப்பு சரியாக இருக்கு என்று ரொம்ப நாளைக்குப் பிறகு இன்றைக்குத்தான் சொன்னாங்க!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சர்வதேச நிதி நெருக்கடிகள் காரணமாக இலங்கையின் தேயிலை தொழில் பாதிப்பு

உலக சந்தையில் தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக இலங்கையின் தேயிலைத் தொழில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிப்புக்களைச் சந்திக்கத் தொடங்கியிருக்கின்றது.

இதன் ஒரு அங்கமாக, கடந்த வாரம் உலக சந்தையில் இலங்கை தேயிலைக்கான தேவைப்பாடும், விலையும் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருக்கின்றன.

இதனைத் தொடர்ந்து பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்திருக்கும் இலங்கைத் தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை, குறிப்பாக நடுத்தர ரக தேயிலைகளை உற்பத்தி செய்யும் தோட்ட உரிமையாளர்களை உற்பத்தியின் அளவினைக் குறைக்கும்படி இலங்கை தேயிலை வாரியம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் உயர்தர தேயிலையைத் தொடர்ந்தும் உற்பத்தி செய்யும்படி அது வலியுறுத்தியிருக்கின்றது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட இலங்கை தேயிலை வாரியத்தின் தலைவர் லலித் ஹெட்டியாராச்சி இது ஒரு தற்காலிக பின்னடைவு என்றும், இந்தக் காலப் பகுதியில் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், முகாமையாளர்கள் தமது தோட்டங்களில் கப்பாத்து செய்தல், புதிய மரக் கன்று



களை நாட்டுதல் போன்ற தோட்ட அபிவிருத்திப்பணிகளில் ஈடுபடலாம் என்றும் அறிவுரை கூறினார். ஓ

# வன்னிப் பிரதேசத்தில் யுத்தம் காரணமாக 55 ஆயிரம் மாணவர்கள் இடம்பெயர்வு

## கல்வியைத் தொடர்வதற்கான வசதிகளை ஏற்படுத்த கோரிக்கை

வன்னிப் பிரதேசத்தில் யுத்தம் காரணமாக 190 பாடசாலைகளைச் சேர்ந்த 55 ஆயிரம் மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அங்கு பாடசாலைகள் சில மூடப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்துள்ள சில பாடசாலைகள் பாதுகாப்பான பகுதியிலுள்ள பாடசாலைகளுடன் இணைந்து செயற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வன்னிப் பிரதேசத்தில் இடம் பெற்று வரும் யுத்தம், மாணவர்களின் கல்வியை வெகுவாகப் பாதித்துள்ளது.

அங்கு 190 பாடசாலைகளைச் சேர்ந்த 55 ஆயிரம் மாண வர்கள் இடம் பெயர்ந் துள்ளனர்.

வன்னியில் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு 3 இலட்சம் அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய பாடசாலை உபகரணங்களும் உடனடியாக வழங்கப்படுவது அவசியம் என வன்னியிலுள்ள கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகள் இடம் பெயர்ந்துள்ளதால் அவை தமது வளங்களை இழந்துள்ளன.

பாடசாலைகளை நடத்துவதற்குத் தேவையான கல்விசார் வளங்கள், மலசல கூட வசதிகள், வகுப்பறைகள் என்பன உடனடியாக ஏற்பாடு செய் யப்பட வேண்டும் என கல்வி அதி காரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வன்னியில் இயக்கி வரும் பாடசாலைகளுக்கு, மேலதிகமாக 300 மலசலகூடங்கள் தேவைப்படுவதாக வன்னி பிரதேச கல்வி அலுவலகங்கள் மதிப்பீடு செய்துள்ளன.

அதிகளவில் இடம்பெயர்ந்த பாடசாலைச் சிறுவர்கள் மரநிழல்களிலும், கூடாரங்களிலுமே வசிக்கின்றனர். இந்நிலையில், அங்கு 20 ஆயிரம் தற்காலிக தங்குமிடங்களை அமைக்க வேண்டிய தேவை உள்ளதாக மாவட்ட செயலாளர்கள் தெரிவித்துள்ளனர். ஓ

## இராசி பலன்

31.10.2008
ஐப்பசி 15 ,வெள்ளிக்கிழமை
துதியை முற்பகல் 7.47மணிவரை
அனுசம் பின்னிரவு 1.26மணிவரை
இராகுகாலம்10.33- 12.03மணிவரை
சுபநேரம்6.03-7.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் வெறுப்பு, வியாபார சிந்தை, காரிய தாமதம், மனச் சோர்வு. |
| இடபம் | வீண்பயம், எடுத்த காரியம் தாமதமாகும், ரோகநிலை, கல்வி யில் ஆர்வம். |
| மிதுனம் | காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, பிறர் உதவி, பிரயாணம். |
| கடகம் | கடின வார்த்தை, உறவினர் வெறுப்பு, எடுத்தகாரியம் தாமதமாகும், பணவிரயம். |
| சிங்கம் | தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, போசன சுகம், தெளிந்த சிந்தை. |
| கன்னி | உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம், திடீர் நன்மை, தெய்வ சிந்தை. |
| துலாம் | தெய்வசிந்தை, நல்ல வரவேற்பு, காரிய சித்தி, தந்தைவழி உறவு. |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, தெய்வசிந்தை, சுபசெலவு, போசன சுகம். |
| தனுசு | பிதாசிந்தை, பிரயாணம், ரோக நிலை, அமைதிக் குறைவு. |
| மகரம் | வீண்பிரச்சினை, முயற்சிதடங்கல், திடீர் நன்மை, தெய்வ சிந்தை. |
| கும்பம் | குடும்ப மகிழ்ச்சி, நிலை மாற்றம், பிரயாண நன்மை, தெய்வ தரிசனம். |
| மீனம் | பெரியோர் சந்திப்பு, உற்சாகம், சுபசெய்தி, விருந்துபசாரம். |

வளவன்

# நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க இலங்கை உள்ளிட்ட நாடுகள் நடவடிக்கை

## ஐ. நா. தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடற்ற நிலையானது, சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உலகில் 11 தொடக்கம் 12 மில்லியன் மக்கள் நாடற்றவர்களாக உள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் நாடற்றவர்களுக்கு பிரஜா உரிமை வழங் குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளன. இது தொடர்பாக ஐ . நா. வின் ஜெனிவா தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடற்ற குழந்தைகள் தமது பெற்றோர் வசிக்கும் நாட்டை பாரம்பரிய பூமியாகக் கொண்டு வாழ்கின்றனர்.

எனினும், சட்ட பூர்வமாக அவர்களை பிரஜைகளாக அங்கீகரிப்பதில் தொடர்ந்தும் இழு பறிநிலை காணப் படுகின்றது.

சிறுவர்கள், இளைஞர்களை நாடற்ற நிலையிலிருந்து விடுவித்து அவர்கள் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப் படுவதை தடுக்க ஐ . நா முகவர் நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

சிறுவர்கள் நாடற்றவர்களாக மாறும் போது அரசியல் மற்றும் நாட்டின் கொள்கை மாற்றம் காரணமாக பெரும் பாதிப்புக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது.

அவர்கள் சிறுபான்மையினரை விட குறைவான சட்டப் பாதுகாப்பையே பெறுகின்றனர்.

டொமினிக்கன் குடியரசு, பர்மா, எஸ் தோனியா, லத்வியா ஆகிய நாடுகளில் இவ்வாறான நிலைமையே காணப்படுகிறது. இங்குள்ள நாடற்ற சிறுவர்கள் பிறப்பு தொடர்பான பதிவுகள், வசித்தல் தொடர்பான ஆவணங்கள் எதுவுமின்றியுள்ளனர்.

இதனால், இக்குழந்தைகளுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு கிடைப்பதில்லை. எனவே, கல்வி, சுகாதார வசதிகளை பெறுவதிலும் இந்த சிறுவர்களுக்கு பிரச்சினை ஏற்படுகின்றன.


இந்நிலையில், உலகம் பூராவும் சுமார் 11 தொடக்கம் 12 மில்லியன் மக்கள் நாடற்ற நிலையில் வசித்து வருகின்றனர்.


எனினும், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளன.

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் பதிவு செய்யப்படுவதிலும் தேசியத்துவத்தை பெறுவதை உறுதி செய்வதிலும் ஐ . நா . வின் சிறுவர் பாதுகாப்பு நிதியமான யுனிசெப் ஈடுபட்டு வருகின்றது.

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள் - விஞ்ஞானம்

1) 


எறும்பொன்று A இலிருந்து பயணித்து B இற்குச் சென்று பின் C ஐ அடைகிறது.
1) எறும்பு பயணஞ் செய்த தூரம் யாது? ..............................
2) அது அடைந்த இடப்பெயர்ச்சி யாது? ..............................


2) 1) கீழே காணப்படும் வெற்றுக்கூட்டுக்குப் பொருத்தமான பதத்தை எழுதுக.

கதி = [ ] / எடுத்தநேரம்    வேகம் = [ ] / எடுத்தநேரம்

2) கதியின் சர்வதேச அலகு யாது? ..............................

3) நேர்கோட்டில் 100m தூரத்தை ஈருளிச் சவாரி வீரர் 10S இல் கடந்தாராயின், அதாவது வேகத்தைக் காண்க?..............................


4) A,B ஆகிய இரு வாகனங்களின் இயக்கங்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளது.




இவ்வரைபைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?
1) A,B ஆகியவற்றின் இயக்கம் பற்றி யாது கூறுவீர் ?
A..............................    B..............................
2) வரைபு B இலிருந்து வாகனத்தின் வேகத்தைக் கணிக்க?
..............................


5) மரத்தில் இருக்கும் பறவை ஒன்று 6 செக்கனில் வானில் 600 m தூரம் பறந்து பின் 3 செக்கனில் மீண்டும் தனது கூட்டை வந்தடைந்தது. அதனது இடப்பெயர்ச்சி நேர வரைபை வரைக?

6) A,B ஆகிய உந்துருளியின் இயக்கத்தை பின்வரும் வரைபுகள் காட்டுகின்றன.




1) வரைபு A இனதும் B இனதும் வேகம் பற்றி யாது கூறுவீர் ?
..............................
2) வரைபு B இலிருந்து அவ் வாகனத்தின் ஆர்முடுகலைக் கணிக்க?
..............................

7) உருவில் காட்டப்படுவது மோட்டார் சைக்கிள் ஒன்றின் வேக-நேர வரைபாகும்.





1) இயக்கத்தின் உச்ச வேகம் யாது? ..............................
2) உச்ச வேகத்தை அடைந்த நேரம் யாது? ..............................
3) முதல் 30 செக்கனில் பயணம் செய்த தூரம் யாது?
..............................
4) வண்டியின் ஆர்முடுகல் யாது?
..............................
5) வண்டியின் அமர்முடுகல் யாது?
..............................
6) இறுதி 15 செக்கனில் பயணம் செய்த தூரம் யாது?
..............................
7) இவ்வண்டி பயணம் செய்த மொத்த தூரம் யாது?..............................

8) பின்வரும் கணித்தல்களை பொருத்தமான சமன்பாட்டைப் பயன்படுத்திக் கணிக்க?
1) நில மட்டத்திலிருந்து 40 $ms^{-1}$ வேகத்தின் நிலைக்குத்தாக மேல் நோக்கி எறியப்பட்ட ஒரு பொருள் 2 செக்கனில் அடையும் உயரத்தைக் கணிக்க? (புவியீர்ப்பு ஆர்முடுகல் = 10 $ms^{-2}$)
..............................
2) 320 m உயரமான கோபுரமொன்றின் உச்சியிலிருந்து ஒரு சிறிய கோளம் சுயாதீனமாக நிலத்தில் விழுமாறு விடுவிக்கப்படுகிறது?
a) நிலத்தில் மோதும் போது அதன் வேகம் யாது?
..............................
b) 10 $ms^{-1}$ வேகத்தில் பயணம் செய்யும் ஒரு மோட்டார் சைக்கிளின் தடுப்பு பிரயோகிக்கப்பட்டு 3 செக்கன் நேரத்தின் பின் அதனதுவேகம் 4 $ms^{1}$ ஆகக் குறைவடைந்தது. அதனது அமர்முடுகலைக் காண்க?

9) 1) 2 Kg திணிவுள்ள விளையாட்டுப் பொம்மையொன்று 3 $ms^{-2}$ ஆர்முடுகலுடன் இயங்கத் தேவையான விசை யாது?
2) வானூர்தி ஒன்றின் திணிவு 400,000 Kg ஆகும். அதன் எஞ்சினிலிருந்து பிறப்பிக்கப்படும் விசை 800,000N ஆகும். அவ் வானூர்தியின் இயக்கத்திற்கான எஞ்சினால் பிறப்பிக்கப்படும் ஆர்முடுகல் யாது?..............................


10) 1. ரவிக்கு சங்கர் கையினால் அடித்த போது வலித்தது. சங்கருக்கும் வலித்தது. அதற்கான கார்ணம் யாது?..............................
2. ரொக்கெட் ஒன்றின் கீழே புகை விசையுடன் தள்ளும் போது ரொக்கெட் மேலே எழும்புகிறது. இதற்கான காரணம் யாது?
..............................
3. மேற்கூறிய இரு சந்தர்ப்பங்களும் நியூட்டனின் எவ் விதியுடன் சம்பந்தப்பட்டவையாகும்?..............................
4. அவ்விதியைக் கூறுக?..............................

11) பின்வரும் சந்தர்ப்பங்களுக்கான காரணங்களைக் .கூறுக.
1) கரம் விளையாட்டின் போது காய்கள் இலகுவாக நகருவதற்காக பவுடர் இடப்படும்.
..............................
2) பாதணிகளின் அடிப்பகுதியில் அவை சறுக்காமல் இருப்பதற்காக வெட்டுக்கள் இடப்படும்.
..............................


12) 


1) மரக்குற்றியின் இயக்கத்தின் போது விற்றராசின் வாசிப்பு எதில் அதிகமாகும்?
..............................
2) இவ் வேறுபாட்டிற்கான காரணம் யாது?
..............................


13) 20 kg திணிவுடைய பொருள் ஒன்று கரடுமுரடான மேசையின் மீது வைக்கப்பட்டுள்ளது. மேசைக்கும் பொருளுக்கும் இடையிலான உராய்வுக் குணகம் 0.5 எனின், 12 N விசையைப் பிரயோகிக்கும் போது ஏற்படும் செவ்வன் மறுதாக்கத்தையும், உராய்வு விசையையும் காண்க.
..............................

14) 


1) உரு A,B இல் எதில் பொருள் சமநிலையில் இருக்கும்?..............................
2) உரு A இலா உரு B இலா பொருள் அசையும்? அதன் திசை யாது?
3) ஒரு பொருளின் மீது 2 விசைகள் தொழிற்படும் போது பொருள் சமநிலையில் இருப்பதற்கான 3 நிபந்தனைகள் தருக?..............................
4) அன்றாட வாழ்வில் இரு விசைகள் சமநிலையில் உள்ளமைக்கு 2 சந்தர்ப்பங்கள் தருக? ..............................

15) 


கோல் AB சமநிலையில் உள்ளது.
விற்றராசு Z இன் வாசிப்பு யாது?..............................



16) 1) இவ் உபகரணத்தின் பெயரைக் குறிப்பிடுக? .......
2) இது எதற்குப் பயன்படுகிறது? ..............................
3) பின்வரும் சந்தர்ப்பத்தில் பயன்படும் நீரமானியின் வகையைக் குறிப்பிடுக?
i) பாலின் அடர்த்தி ..............................
ii) இறப்பர் பாலின் அடர்த்தி ..............................
4) கடல்நீர் ,மண்ணெண்ணெயினுள் நீரமானியை இடும்போது நீரமானி அமிழும் ஆழம் பற்றி யாது கூறுவீர்?..............................
5) பிலிம்சோல் கோடுகளின். குறியீட்டின் அவசியத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
6) பிலிம்சோல் குறியீட்டில்
i) WNA ..............................எதனைக் குறிக்கிறது
ii) IS ..............................எதனைக் குறிக்கிறது

17) 1) வேலை எனப்படுவது ..............................
2) வேலையின் சர்வதேச அலகு யாது? ..............................
3) 10 N விசை பிரயோகிப்பதன் மூலம் பொருளானது 3 m தூரம் அசையுமாயின் அப்பொருளினால் செய்யப்பட்ட வேலையைக் கணிக்க?..............................

18) 1) பொறிமுறை சக்தியின் வகைகள் எவை?..............................
2) அழுத்த சக்தி தங்கியுள்ள காரணிகள் எவை?..............................
3) 2 m உயரமான மரத்தில் உள்ள 2 kg தேங்காயில் உள்ளடங்கியுள்ள சக்தி எவ்வளவு?($g=10ms^{-2}$)
4) குறித்த திணிவுடைய பொருளின் இயக்க சக்தியை பாதிக்கும் காரணி எது?..............................
5) 20000 g திணிவுள்ள கார் 3 m/s வேகத்துடன் இயங்குமாயின் அக் காரின் இயக்க சக்தி எவ்வளவு?

19) 1) சக்தி காப்பு விதி எவற்றைக் கூறுகின்றது?..............................
2) 2 kg திணிவுடைய பொம்மையானது 20 m உயர மாடியில் இருந்து தவறி விழுகின்றது. அப் பொம்மை நிலத்தை அடிக்கும் வேகம் யாது?
3) வலு என்றால் என்ன? அதன் சர்வதேச அலகைத் தருக?..............................
4) 4 m ஆழமான கிணற்றிலிருந்து 20 N விசை பிரயோகித்து நீரினை எடுப்பதற்கு 2 Sec தேவைப்படுமாயின்
அ) செய்யப்பட்ட வேலை..............................
ஆ) வலு ..............................

# நோத்முதல் கோபல்லவா வரை 140

## டொனமூர் யாப்புத் திருத்தம்

டொனமூர் அமைப்பு பெரும்பாலும் சர்வதேச சங்கத்தின் அமைப்பையும் , லண்டன் மாநகரசபை அமைப்பையும் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். அரசாங்கத் திணைக்களங்கள் பத்துப் பெரிய பிரிவாகப் பிரிக்கப்பட்டு மந்திரிமாரின் பரிபாலனத்தில் நிர்வாகஞ் செய்ய விடப்பட்டன. இவற்றுள் பிரதான திணைக்களங்கள் அரசாங்கக் காரியதரிசிகள் மூவரிடம் விடப்பட்டன.

பிரித்தானிய பாராளுமன்ற முறைகள் டொனமூர் அமைப்பில் புகுத்தப்பட்டன. தெரியப்பட்ட வாசகர் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல், முறிகள் மூன்று முறை வாசிக்கப்படுதல், நிலையற் குழுக்கள்,கேள்விநேரம், மன்னர்பிரானின் ஒப்பாசார இசைவு என்பனவும் பிறவும் இலங்கையருக்குப் பாராளுமன்ற வரன்முறைகளையும் சம்பிரதாயங்களையும் பழக்கவே கையாளப்பட்டன என்பர்.

டொனமூர் திருத்தம் ஏற்பட்ட காலத் தில் இலங்கையில் அரசியற் கட்சிகள் இருக்கவில்லையாயினும் சிங்களமயமான தேசிய மகாசபை ,இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் சுதந்திரக்கட்சி, மட்டக்களப்புத் தமிழர் சங்கம், இலங்கை இந்தியர் காங்கிரஸ், முஸ்லிம் அரசியற் சங்கம், ஐரோப்பியர் சங்கம், தமிழர் மகாசபை, டொடன்டுவா மகாசபை என்னும் சங்கங்கள் இருந்தன. அவை அரசியற் கட்சி உருவத்தில் நிலைக்கவில்லை யாதலால் விசாரணைச் சபை சனநாயக பிரதிநிதித்துவ சுயவாட்சியை உடனடியாக இலங்கைக்கு கொடுக்க காலம் சரியில்லை யெனக் கருதினர். அதற்குக் காரணம் இலங் கையில் வகுப்புவாதம் அதிகமாய் நிலவிய தென்றனர்.

டொனமூர் திருத்தம் 45பிரசித்தங்களைக் கொண்டதாய்,யாப்பின் அமைப்பு, சட்ட

### மீள் பார்வை

நிர்வாகத்தின் நடைமுறை, அதன் அமைப்பு, நிர்வாக சபைகளின் தொகை, அவற்றின் அங்கத்தவரின் கடமையும் பொறுப்பும், அவர்களுக்கும் நிர்வாக சபைக்கும் உள்ள தொடர்பு, நிர்வாக சபைகளின் பரிபாலனத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்கள், அரசாங்க உத்தியோகத்தர் எனப் படும் மூன்று காரியதரிசிகளின் பரிபாலனத்தில் உள்ள திணைக்களங்கள், மந்திரிமார் சபை, சட்ட நிர்வாக சபையின் வைகல், ஆள்பதி அவர்களின் முறையேற்பு, அரசாங்க சபையின் வைகல், முறிகளின் ஆரம்பம், தனிப்பட்ட அங்கத்தவரின் சலுகைகள், நிலையற்குழு, முறிகளின் இரண்டாம் வாசிப்பு, அறிக்கை நிலை, மூன்றாம் வாசிப்பு , அரசாங்க சபையின் கோலாகலத் திறப்புவிழா, வாசகர்கடமை, ஆள்பதி அவர்களின் உரிமை, கடமை, அதிகாரம் என்பனவும் பிறவும் வரையறை செய்வதாய் அமைந்தது.

டொனமூர் அமைப்பைச் சுருக்கமாய்க் கூறின், இதுகாறும் சட்டசபை எனவும், சட்ட நிர்வாக சபை எனவும் நிலவிவந்த இரு சபைகளின் கருமங்களை இனிமேல் அரசாங்க சபை என உள்ள ஒரு சபையே நடத்தும். அரசாங்கசபை சட்டமியற்றுதல் காரணமாகவும் , சட்ட நிறைவேற்றுதல் காரணமாக வும் வெவ்வேறு நேரத்தில் கூடும்.

அரசாங்கத் திணைக்களங்கள் யாவும் இதுகாறும் குடியேற்ற அலுவலாளர் எனப்படும் பிரதம காரியதரிசியின் கண்காணிப்பில் நடைபெற்றமுறை மாற்றியமைக்கப்பட்டுப் பத்துப் பேரின் பொறுப்பில் நடை பெறும். இப்பத்துப் பேரில் மூவர் அரசாங்க உத்தியோகத்தர் எனவும் உத்தியோக அங்கத்தவர் எனவும் கூறப்படும் காரியதரிசிகளாவர். ஏனைய ஏழுபேரும் ஏழு நிர்வாக சபைகளின் தலைவர்கள் எனப்படும் மந்திரிமார்களாவர்.

இதுகாறும் குடியேற்ற அலுவலாளர் என வழங்கிய உத்தியோக அங்கத்தவர் இனி மேல் பிரதம காரியதரிசி என வழங்கு வர். அங்ஙனமே சட்டத்துறை நாயகம் என வழங்கியவர் இனிமேல் சட்டக் காரியதரிசி என வழங்குவர்.

இறைசேரி நாயகம் இனி மேல் நிதிக் காரியதரிசி என வழங்குவர். இம் மூவரும் காரியாதரிசிகள் என வழங்கிய போதிலும், மந்திரிப் பொறுப்புள்ளவராய் மந்திரிமார்



சபை எனக் கருதப்படும் சட்ட நிறைவேற்று சபையிலேயும் சட்ட சபையிலேயும் இடம்பெறுவர். இவர்கள் ஆலோசனைகள் கூறுவதையே பிரதான கடமையாகக் கொண்டிருப்பாரன்றிச் சட்டநிறை வேற்றுத் துறையில் இரண்டாந்தரக் கடமை செய்பவராவர்.

ஏனைய ஏழு மந்திரிமாரும் அரசாங்க சபை கூடியதும் அங்கத்தவர் தங்களை ஏழு நிர்வாக சபைகளுள் பிரித்து அவற்றின் தலைவர்களாய்த் தெரியப்படுபவராவர்.

**க.சி.குலரத்தினம்**

இத் தலைவர்களை ஆள்பதி அவர்கள் அங்கீ கரித்து மந்திரிமார் என நியமிப்பார். இவர் களை நிர்வாக சபைத்தலைவர்கள் எனவும் மந்திரிமார் எனவும் அழைப்பர். இவர்கள் தத்தம் பொறுப்பில் உள்ள திணைக்களங்க ளின் பரிபாலனத்துக்குத் தனித்தனி பொறுப் புள்ளவராயும் நிதி சம்பந்தமான அலுவல்களுக்கு எல்லோருஞ் சேர்ந்து கூட்டுப் பொறுப்புள்ளவராயும் இருப்பர். (தொடரும்)





கலைமாமணி அண்ணாமலை மகாதேவனின் 'Poetical World' ஆங்கிலக் கவிதை நூல் வெளியீட்டு விழா தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பலாலி ஆசிரியர் கலாசாலையின் வருகை விரிவுரையாளர் செ. பரராஜசிங்கம் தலைமையுரையாற்றுவதையும், கலாபூஷணம் தெணியான், சி.க.லோகநாதன்,மா.கிருஷ்ணகாந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் த.மோகன் நூலை வெளியிட்டு வைக்க மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் திருமதி இராசம்மா வல்லிபுரம் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வதையும், அருகில் நூலாசிரியர், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் அ.விஜயநாதன்,வெளியீட்டாளர் ம.மதியழகன் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும், நூல் ஆய்வுரை நிகழ்த்திய யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, வாழ்த்துரை வழங்கிய கலாபூஷணம் தெணியான் ஆகியோர் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# பூமிக்கு பெரும் சவாலாக அமையும் ஓசோன் வெறிதாக்கல்

(2) கைத்தொழில் புரட்சி, தொழில் நுட்ப வளர்ச்சி என்பவற்றால் பரிணமித்த குளிரூட்டிகள், வெப்பத் தணிப்பு முறைகள் (AC) , வளிபதனிகள், பெயின்ற் ஸ்பிறே, குளிர்சாதன பெட்டிகள், ஏரசோல்கள் (Aerosole), உற்பத்தி , வாசனைத் தைலங்கள் , விசிறிகள் போன்ற மனிதனது படைப்புகளில் தொழில் உற்பத்தி முதல்களாக CFCS (குளோரோ புளோரோ காபன்கள்) பயன்படுத்தப்படுகின்றன.


தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் காபநேற்குளோரைட்டு, மீதைல் குளோரோபோம், மீதைல் புறோமைட்டு போன்றசில அலசன் சேர்வைகள், ஏலோன்கள் ($CBrCLF_2$) , நைதரசன் ஒட்சைட்டுக்கள் போன்றன ஓசோன் அழிவை ஏற்படுத்துகின்றன.

இவை இயற்கைக்கு எதிரான மனித செயற்பாடுளாகும். இதன் விளைவுகள் மனிதனை மட்டுமன்றி புவிவாழ் அனைத்து உயிரங்கிகளையும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பது வருந்தத்தக்க விடயமாகும்.

அந்தவகையில் எதிர்காலத்தில் ஓசோன் வெறிதாக்கல் காரணமாக புவி வாழ் உயிரங்கிகள் சந்திக்க போகும் பேரிடர்களை தவிர்க்க சர்வதேச ரீதியில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 1985 இல் ஓசோன் படையை பாதுகாத்தலை நோக்காகக் கொண்ட வியன்னா பிரகடனம் 1987இல் கைச்சாத்தான மொன்றியல் ஒப்பந்தம் என்பன குறிப்பிடத்தக்கன.

மொன்றியல் ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து 1995 இன் பின் அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு CFC உருவாக்கப்படமாட்டாது என்பதாக 2030 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி துறை ஏரசோல் உற்பத்தித்துறை ஆகியவற்றில் CFC ஐ தவிர்த்தலும், குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகளில் குளோரோ புளோரோ காபனை ($CFC_{12}$) மீளப் பெறுதலும் மீள் சுழற்சிக்குட் படுத்தல் போன்ற பல திட்டங்கள் செயற் படுத்தப்பட்டு வருகின்றன.



அண்டார்க்டிக் ஓஸோன் துளை

அந்த வகையில் இலங்கையிலும் 2007 ஆம் ஆண்டில் CFC ஐவெளியிடும்பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டமை, பல குளிர்பத னிகள், வளிபதனிடும் தொழிற் சாலைகளில் CFC வெளியேறாத வகையில் தொழில்நுட்பங் கள் புகுத்தப்பட்டமை, வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் போது வாயு வெளி யேற்றச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண் டுமென்ற சட்டங்கள் இயற்றப்பட்டு அமுல்படுத்தப் பட்டு நடை முறைப்படுத்படுகின்றமை குறிப்பிடத்தக்காகும்.


அத்துடன் அண்டாட்டிக்காவின் வான் பரப்பிலுள்ள ஓசோன் துவாரத்தை அடைக் கும் (re build) முயற்சியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

இப் போராட்டத்தில் 2065 ஆம் ஆண்டு வெற்றி கிடைக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றை விட உயிரங்கிகளின் நிலவுகைக்கு ஓசோன் படையின் அவசியத்தை உணர்த்தும் வகையில் செப்ரெம்பர் 16 ஆம் திகதி சர்வதேச ஓசோன் தினமாக பிரகடனப் படுத்தப்பட்டு CFC தடுப்பு நடவடிக்கைகள் வருடாந்தம் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

உயிர்கள் வாழும் ஒரே கோளான இந்தப் புவியை பாதுகாக்கும் நோக்கில் ஓசோன் படை அழிவினால் ஏற்படும் பேராபத்துக்களைக் கருத்தில் கொண்டு உலக மக்கள் அனைவரும் தாம் பயன்படுத்தும் சாதனங்களின் பயன்பாட்டை குறைத்தல் அல்லது கட்டுப்படுத்துவதன் மூலமும் தேவையற்ற வாகனப் போக்குவரத்துக்களை தவிர்த்தல் மூலமும் ஓசோன் அழிவை தடுக்க பங்களிப்புச் செய்ய முடியும். (முற்றும்)

**திருமதி கோமளரஞ்சிதம் கந்தவேள்**
**இணுவில்**



# தரிசனம்

Muslim Information Centre

வலம்புரி...

# யாழ்ப்பாண மக்களை வதைக்கும் பயண அனுமதியும் - பயணமும்

பாதுகாப்பு காரணங்களுக்காக யாழ்ப்பாண மக்கள் அனுபவிக்கும் அசௌகரியம் சொல்லும் தரமன்று. வீதித்தடை, பயண அனுமதி, குடும்பப்பதிவு, குடும்பப் புகைப்படம், விசேட அடையாள அட்டை, பொலிஸ் பதிவு என நீண்டதொரு துயரப் பட்டியலை தயாரிக்க முடியும். அந்த வகையில் வீதித்தடைகளால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது பற்றி கடந்த வாரம் பார்த்தோம்.



வீதித்தடைக்கு இணையாக யாழ்ப்பாணத்து மக்கள் அனுபவிக்கும் அடுத்த பெரும் துயர் பயண அனுமதியும் (Clearance) பயணமும் ஆகும்.

யாழ் மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களிற்கு செல்வதாயின் படைத்தரப்பிடம் இருந்து பயண அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும். 1995ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதையடுத்து இடம்பெயர்ந்த மக்கள் 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பினர். யாழ்ப்பாணத்திற்கு திரும்பிய மக்கள் இன்று வரை 13 ஆண்டுகள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வாழ்கின்றனர் என்பது ஆச்சரியமான உண்மை.

1996ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாண மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கு பயண அனுமதி பெறும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டதுடன் வரையறுக்கப்பட்ட அளவிலான விமான கப்பல் சேவைகளை பெற்றுக்கொள்வதிலும் மக்கள் பட்ட பெரும் துயரம் மனித மொழிகளில் விபரிக்கக் கூடியவை அல்ல.

பயண அனுமதியை பெறுவதற்கு மேலாக பயணத்தை மேற்கொள்வதற்காக படையினரின் சிவில் அலுவலகங்களிலும் , அரசியல் கட்சிகளின் அலுவலகங்களிலும் மக்கள் தவம் கிடந்தனர். இவ்விதம் கப்பல் மற்றும் விமானப் பயணத்திற்காக தவம் கிடந்தவர்களில் வயோதிபர்கள் சிலர் மயக்க முற்று வீழ்ந்து மரணமடைந்த சம்பங்களும் உண்டு.

## யுத்த நிறுத்த ஒப்பந்தம்

இத்துயரத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் 2002ஆம் ஆண்டு அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை அமைந்தது. 1996ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டுவரையான 6 வருட காலத்தில் பயண அனுமதியை பெற்றுக்கொள்வதிலும், பயணத்தை மேற்கொள்வதிலும் யாழ். குடாநாட்டு மக்கள் பட்ட துன்பம் நீங்கும் வகையில் ஏ-9 பாதை திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த படையினரும் , வன்னிப் பகுதியில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விடுதலைப்புலிகளும் தத்தம் எல்லைப் பகுதிகளில் சோதனைச்சாவடிகளை அமைத்திருந்தனர். அவ்வகையில் யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட முகமாலைப்பகுதியில் இரு தரப்பினதும் சோதனைச் சாவடிகளுக் கிடையில் 500 மீற்றர் தூரம் சூனியப்பிரதேசமாக (படையினர் , விடுதலைப்புலிகள் நடமாட முடியாத பகுதியாக ) பிரகடனப் படுத்தப்பட்டிருந்தது.

இதேபோல் வன்னியில் மறுமுனையில் பன்றிக்கெய்த குளத்தில் விடுதலைப் புலிகளும் ஓமந்தையில் படையினருமாக தத்தம் சோதனைச்சாவடிகளை அமைத்துக்கொண்டனர். இரண்டு முனைகளிலும் உள்ள சோதனைச்சாவடிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) கண்காணிப்புப்பணியில் ஈடுபட்டது. தனியார் வாகனங்கள் மூலம் தரை வழியாக யாழ்ப்பாணத்திற்கும்- வெளிமாவட்டங்களிற்கும் செல்லும் வசதி ஏற்பட்டதனால் பயணத்தில் மக்கள் பட்ட துன்பம் தாராளமாக குறைந்தது. படையினர் மற்றும் விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடிகளில் இடம்பெறும் சோதனையும் பதிவும் தவிரப்போக்குவரத்தில் எந்த இடையூறும் இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாலை புறப்பட்டால் அன்றைய தினம் மாலை 5 மணிக்கு கொழும்பைச் சென்றடையும் வசதியும் கொழும்பிலிருந்து இரவு 9 மணிக்கு பயணத்தை மேற்கொண்டால் மறுநாள் மதியம் 12 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும் வசதியும் இருந்தது.

## சிங்களமக்கள் வருகை

2002இல் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையயடுத்து ஏ-9 பாதை திறக்கப்பட்டதுடன் சமாதான சிந்தனையோட்டம் வேகம் எடுத்தது எனலாம்.

சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திற்கும் , யாழ்ப்பாண மக்கள் தென்பகுதிக்கும் பரஸ்பரம் சென்று சமாதானச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். இச் செயலாக்கம் மதத் தலைவர்கள், மாணவர்கள் , விளையாட்டு வீரர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என்ற பல் பரிமாணங்களில் இடம்பெற லாயிற்று.

இதற்கு மேலாக சமாதானத்தை வலியுறுத்தும் பாதையாத்திரைகளும் குதிரைச் சவாரிகளும் சிறப்பாக இடம்பெறுவதற்கு ஏ-9 பாதை வழி திறந்து கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்கள் மீளவும் தங்களது சொந்த இடங்களில் குடியமரவும் , வியாபார தொழில் முயற்சிகளில் ஈடுபடவும் ஆரம்பித்தனர். மீனிடத்தின் ஒன்றுகூடல் எனும் மாபெரும் சமாதான நிகழ்வு யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபத்தில் நடந்த போது அதில் சிங்கள புத்தி ஜீவிகளும், எழுத்தாளர்களும் கலந்து கொண்டு இன, மத, மொழிகளுக்கிடையிலான ஒற்றுமைப் பாட்டினை வலியுறுத்தின. அதேபோல் கொழும்பிலும் சிங்கள அமைப்புக்களால் சமாதான நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதையெல்லாம் ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதனால் ஏற்பட்ட இனத்துவ ஒற்று மைக்கான முன்னெடுப்புகளாகும்.

## மீண்டும் துயரம்

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து திறக்கப்பட்ட ஏ-9பாதையின் நன்மையை யாழ்ப்பாண மக்கள் தொடர்ந்து அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லை. 2002 இல் ரணில் -பிரபா செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் விலக்கிக்கொள்ளப்பட்டது.

ஒப்பந்தம் செய்யப்பட்டு சமாதானப் பேச்சு வார்த்தைகள் 6 தடவைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், நான்கு வருடத்தில் ஒப்பந்தம் உடைந்து போனமை இலங்கையின் வரலாற்றில் நடந்த மிகப்பெரும் துரதிஷ்டமாகும்.



எந்த ஒப்பந்தம் ஏ-9 பாதையை திறந்து வைத்ததோ அந்த ஒப்பந்தம் கிழிக்கப் பட்டபோது பாதையும் மூடிக்கொண்டது. ஆம், 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ஆம் திகதி ஏ-9 பாதை பூட்டப்பட்டதையடுத்து 1996ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதே பயணத் துயரத்தை யாழ்ப்பாண மக்கள் மீண்டும் அனுபவிக்கலாயினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங் களிற்கு செல்வதாயின் படையினரிடம் பயண அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனை மீண்டும் அமுலாக்கப்பட்டது.

## பயண அனுமதி எதற்காக?

பயண அனுமதி எதற்காக எடுக்கப்பட வேண்டும் என கேள்வி எழுப்பும் பெயர் குறிப்பிட விரும்பாத யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் தனது நியாயப்பாட்டை முன்வைக்கின்றார்.


யாழ். குடாநாட்டில் இருக்கக்கூடிய எந்தவொரு பொதுமகனும் படையினரிடம் பதிவு செய்யாமல் இருக்கமுடியாது என்பது நிறுதிட்டமான உண்மை. 'குடும்பப்பதிவு' என்ற வரையறைக்குள் யாழ். குடா நாட்டில் வசிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் பிரிவுக்குட்பட்ட இராணுவ சிவில் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

இதற்கு மேலாக குடும்ப அங்கத்தவர்கள் அடங்கிய புகைப்படம் (group photo) எடுக்கப்பட்டு படை அதிகாரிகளினால் உறுதிப் படுத்தப்பட்டு அவை வீடுகளில் காட்சிப் படுத்தப்பட்டிருப்பதும் கட்டாயமானதாகும். சுருங்கக்கூறின் யாழ். குடாநாட்டிலுள்ள ஒவ்வொருவரினதும் விபரங்கள் அடங்கிய பட்டோலை படையினரிடம் உள்ளது. எனினும் வெளிமாவட்டங்களிற்குப் பயணிப்பதாயின் படையினரிடம் பயண அனுமதி எடுத்தாக வேண்டும் என்ற நிபந்தனை எதற்காக? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

அதிலும் சார்க் மாநாட்டைத் தொடர்ந்து யாழ்ப்பாண மக்கள் வெளிமாவட்டங்களிற்குச் செல்வது முடியாத காரியமாயிற்று. சார்க் மாநாட்டைச் சாட்டாகக் கொண்டு யாழ்ப்பாண மக்கள் கொழும்பு செல்வதை தடுக்கும் புதிய நிபந்தனைகளைப் படையினர் அறிவித்துள்ளனர்.

இந் நிபந்தனைகளை நிறைவேற்றி பயணத்தை மேற்கொள்ளக் குறைந்தது ஆறு மாதங்களாவது தேவை. குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் ஒருவர் தான் எங்கு தீங்கவுள்ளாரோ அந்த முகவரியைப் பயண அனுமதிக்கான படிவத்தில் தெரிவிக்கவேண்டும். அந்த விலாசத்திற்கு கொழும்பிலுள்ள பொலிஸார் நேரில் சென்று வீட்டு உரிமையாளர் தொடர்பான அறிக்கையை தயாரித்து யாழ்ப்பாணத்திலுள்ள சிவில் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்த பின்னரே பயண அனுமதி

(7ஆம் பக்கம் பார்க்க)



தரிசனம்
வலம்புரி

# விஜயனின் வருகை

## தமிழர் பார்வை

இலங்கை வரலாற்றினைச் சில விடத்து நம்பகத்தன்மையோடும் பல விடத்து நம்பிக்கை தன்மையற்றும் விபரிக்கின்ற வரலாற்று நூல் ஆவணங்களில் முதன்மையானது. அகாசம்சமாகும்.

இலங்கைக்கு பௌத்தசமயம் வந்த வரலாற்றையும் இலங்கையை ஆட்சி புரிந்த மன்னர்களின் வரலாற்றையும் விபரிக்கும் ஒருகால ஏடாக விளங்குகின்றது. மகாவம்சத்தை முற்று முழுதாக இலங்கை வரலாற்றினைச் சரிவரக் கூறும் ஆதார நூலாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

அதேபோல மகாவம்சத்தை முற்று முழுதாக அப்படியே தூக்கி வைத்து விட்டு இலங்கை வரலாற்றினை இனங்காணவும் முடியாது. மகாவம்சம் ஒரு புராணம். இதிகாசப் பண்புகளைக் கொண்ட பனுவல். இலங்கை வரலாற்றினை ஓரளவு புரிந்து கொள்ள உதவும் ஒரு ஆவணம்.

விஜயன்- குவேனி வரலாற்றோடு இலங்கை வரலாறு மகாவம்சத்தில் ஆரம்பமாகின்றது. விஜயனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் நாகரிகமான ஒரு மக்கட் கூட்டம்இருந்தது என்பதை மகாவம்சத்திலிருந்தே அறிந்து கொள்ள முடிகின்றது. இயக்கர்கள், நாகர்கள், ஆரியர்கள் என்போர் இங்கு குடியேற வந்துள்ளனர். புத்தரின் இலங்கை விஜயங்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

புத்தரின் முதலாவது விஜயத்தின் போது இலங்கையில் மகாநாகா வனத்தில் கூடியிருந்த இயக்கர் என்ற மக்களை பயமுறுத்தி அவர்களை அங்கிருந்து அகற்றினார் என்கிறது மகாவம்சம். மகாநாகா தோட்டம் மகியங்கனையில் அமைந்திருந்தது. புத்தரின் வருகையால் அவ்விடத்திலிருந்த இயக்கர்கள் அகன்றதும் அங்கு 'தேவர்கள்' கூடினார்கள். சுமணகுத்தமலை (சிவனொளிபாதம்மலை) யின் தேவர்களின் இளவரசனான மகாசுமணன் தன் பரிவாரங்களுடன் அங்கு வந்தான். யார் இந்தத் தேவர்கள்? ஆரியக்குடி யேற்றங்கள் அலை அலையாகஇலங்கையில் காலத்துக்குக்காலம் நிகழ்ந்துள்ளன. ஆரியர்கள் தங்களைத் தேவர்கள் எனவும் திராவிட மக்களை தஸ்பூக்கள் (அடிமைகள்) எனவும் அழைத்துக் கொண்டனர்.

விஜயனின் வருகையோடு ஆரியக் குடியேற்றங்கள் இலங்கையில் நிலைத்தன என்பதில் பிடிவாதமாக இருக்கும் மகாவம்சம் முதல் வந்த குடியேற்றங்களை மறந்துவிட்டன. மகாவம்சம் குறிப்பிடும் தேவர்கள் முதலில் வந்து குடியேறிய ஆரியர்கள். புத்தரின் இரண்டாம் ,மூன்றாம் வருகைகளின் விபரணத்தில் இலங்கையில் வாழ்ந்து நாகர்களைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது.

ஆகவே விஜயன் -குவேனி காலத்துக்கு முந்திய ஆதி இலங்கை மக்கள் இயக்கர் , ஆரியர் ஆவர்.

3.விஜயன் தன் எழுநூறு தோழர்களுடன் இலங்கையில் கால் பதித்தான். துட்டர்களான அவர்களைக் காப்பாற்ற புத்தர் விரும்பினார். விஜயன் குவேனியைச் சந்திக்கும் போது அவள் நாகரிகமான ஒரு தொழில் நுட்பம் மிக்க பெண்ணாக இருப்பதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது.

ஒரு குளக்கரையில் துறவி வடிவில் நூல் நூற்றுக் கொண்டிருந்த குவேனியை விஜயன் சந்திக்க நேரிடுகிறது. அவளை மணந்து கொண்டதும் இரு பிள்ளைகளுக்குத் தந்தையானதும் வரலாறு . எந்த இடத்திலும் விஜயனும் அவனது தோழர்களும் ஆரியரென மகாவம்சத்தில் கூறப்படவில்லை. பட்டம் சூட்டும் போது அவனது தகுதிக்கு நிகரான அரசகுலப் பெண்ணொருத்தி தேவைப்பட்டாள். அதற்காக மணப்பெண்களாகப் பாண்டிய நாட்டிலிருந்து மணப்பெண்களும், வேலையாட்களும் தருவிக்கப்பட்டனர். தென்னிந்தியாவிலுள்ள பாண்டிநாட்டை மதுராவிலுள்ள பாண்டு நாடாக்கச் சிலர் முயல்கின்றனர்.



கலாநிதி க.குணராசா
(செங்கை ஆழியான்) எழுத்தாளர்

4. விஜயன்- குவேனிக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த ஆதிக் குடிமக்கள் இயக்கர், நாகர் தேவர்களென்ற ஆரியராவர். பெரும் குடியேறிகளாக விஜயனும் தோழர்களும் வந்தனர். அவர்களை மணக்கப்பாண்டிய தமிழ் பெண்களும் பரிவாரங்களும் வந்தனர். சிங்கள விஜயனுக்கும் தோழர்களுக்கும், பாண்டிய பெண்களுக்கும் பரிவாரமாக வந்த திராவிட மக்களுக்கும், பின்னர் வந்து குடியேறிய மக்களுக்கும் இயக்கருக்குமாக இலங்கை மக்கள் பெருகினர்.

ஆகவே இலங்கை இந்த மக்களுக்குச் சமமான உரித்துடையது. மொழியால் மட்டும் குறித்த மக்களிடம் இனத் தூய்மை காணப்படுவதாக எவ்வாறு வாதிக்கலாம்?

---

# யாழ்ப்பாண மக்களை வதைக்கும்...

(6ஆம்பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதா இல்லையா என்ற முடிவு எடுக்கப்படும். அப்படியானால் இது சாத்தியமாகுமா? என்பதை எவரும் இலகுவாக புரிந்து கொள்ளமுடியும். இதில் மிகப் பெரும் வேதனை என்னவெனில் சார்க் மாநாட்டையொட்டி 60 வயதிற்கு மேற்பட்டவரும் பயண அனுமதி எடுக்கவேண்டும் என்ற நிபந்தனை அறிமுகப்படுத்தபட்டதாகும் என்பது பேராசிரியரின் கருத்து.

**அளவெட்டியைச்சேர்ந்த எஸ்.கனகசபை என்பவர் கூறுகையில்,**

எனக்கு 73 வயதாகின்றது. அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவன். எனது அரச பணி கொழும்பில் ஆரம்பித்து கொழும்பிலேயே நிறைவு பெற்றது. 35 வருடங்கள் நான் சேவையாற்றியுள்ளேன். ஆனால் தற்போது கொழும்பு செல்வதாயின் எனக்குப் பயண அனுமதி தேவை என்கிறார்கள். எதற்காக? 35 வருடங்கள் அரச சேவையில் பணியாற்றியதற்கான கௌரவிப்பு இது தானா? இத்தகையதொரு நிலை தமிழன் என்பதால் எனக்கு ஏற்பட்டது என்றே கருதுகிறேன் என்றார்.

**கே. சுமங்களன் (22 வயது கொழும்புத்துறை) என்ற இளைஞன் கூறுகின்றார்.**

யாழ்ப்பாணத்தில் வேலை கிடைப்பது என்பது முடியாதகாரியம். இதனால் சவுதிக்குச் சென்று வேலை செய்யலாம் என்று எண்ணியுள்ளேன். சவுதிக்குச் செல்வதுகூட எனது நண்பனின் நிதியுதவியால் தான் இருந்தும் பயண அனுமதிக்காக விண்ணப்பித்து விட்டு எனது பெயர் வந்துவிட்டதா என அறிவதற்கு சிவில் அலுவலகத்திற்கு அலைந்து திரிகின்றேன். என்போன்ற எத்தனையோ இளைஞர்கள் தமது குடும்பத்திற்கு - பெற்றோரிற்கு உதவமுடியாமல் வறுமையில் வாடுகின்றனர். இத்தகைய துரதிஷ்ட நிலை தமிழனாகப் பிறந்ததால் ஏற்பட்டது தானே என பெருமூச்சுடன் கூறினார்.

**எம். சுதர்சனா ( வயது 26)**

திருமணத்திற்காக லண்டன் செல்லவுள்ளேன். ஆனால் பயண அனுமதி இன்னமும் கிடைக்கவில்லை. இரண்டு தடவைகள் விண்ணப்பித்து விட்டேன். இன்னமும் அனுமதி கிடைக்கவில்லை. எப்போது கிடைக்கும் என்றும் தெரியாது. திருமணம் நிச்சயிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகின்றது. பயண அனுமதி கிடைக்காமையினால் கொழும்பு செல்ல முடியாமல் இருக்கிறது. எனது திருமணம் காலம் கடந்து செல்கிறது. இதற்கு மேலாகப் பொலிஸ் கிளியரன்சும் கேட்கிறார்கள் இவற்றையெல்லாம் எடுத்து முடிப்பதற்குள் இரண்டு வருடங்கள் ஆகிவிடும் போல் தெரிகிறது. காலம் கடந்து சென்றால் திருமணத்தை நிச்சயித்தவர்கள் அதுவரை பொறுத்திருக்க மாட்டார்கள் இத்தகைய பயண அனுமதி என்போன்ற பெண்பிள்ளைகளின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. எனவே படைஅதிகாரிகள் இதுவிடயத்தில் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்கிறார்.

யாழ்ப்பாணத்தில் படையினர் ஒவ்வொருவரினதும் முழு விபரங்களை திரட்டி வைத்துள்ளனர். அப்படியாயின் ஒரு படிவத்தை பூர்த்தியாக்குவதுடன் பயணம் செய்வதற்கு அனுமதிக்கலாமே! என்ற கேள்வியை எழுப்புகிறார் பெயர் குறிப்பிட விரும்பாத குடும்பஸ்தர் ஒருவர். பயண அனுமதியை ஒரு தடவை பெற்றால் அதனைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கலாம் அல்லவா? வெளிமாவட்டத்திற்குச் செல்லும் ஒருவர் ஒவ்வொரு தடவையும் பயண அனுமதியை பெறவேண்டும் என படையினர் நிபந்தனை விதித்திருப்பது நியாயமற்ற செயல். இத்தகைய மனிதநேயத்திற்குப் புறம்பான செயல்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றார் அவர்.

**பவளம்மா (வயது48) இவர் கூறும் கருத்து**

யாழ்ப்பாணத்திலிருந்து பயண அனுமதியைப் பெற்றவர்கள் கொழும்பிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யவேண்டியதில்லை என்றாவது ஒரு நெருக்கடிக் குறைப்பை செய்திருக்கலாம். எத்தனை யோ கஷ்டங்களின் மத்தியில் பயண அனுமதியைப் பெற்று பலாலியிலுள்ள விமான படைத்தளத்தில் அதனை ஒப்படைத்து விட்டு வெறுங்கையுடன் கொழும்புக்குச் செல்கின்றோம். பயண அனுமதி எடுத்ததற்கான சான்றிதழை வைத்திருப்பதற்கும் அதன் மூலம் கொழும்பில் பொலிஸில் பதிவு செய்யாமல் குறித்த பயண அனுமதிச் சான் றிதழைப் படைத்தரப்பிடம் காட்டி பாதுகாப்பாக நடமாடக்கூடிய வசதியையாவது படைத் தரப்பினர் செய்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் எதனையும் செய்யவில்லை. இதிலிருந்து இந்த நாட்டில் தமிழர்கள் எப்பாகத்திலும் நிம்மதியாக வாழக்கூடாது என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

கடந்த செம்டெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பயண அனுமதி எடுக்கவேண்டியதில்லை என்ற அறிவிப்பு முதியவர்களுக்கு செய்யும் பாவத்தைக் குறைப்பதாகும். இந்த அறிவிப்பு இடையில் முறியாமல் தொடர வேண்டும்.

அதேநேரம் படைத்தரப் பினர் குடும்பப்பதிவு, விசேட அடையாள அட்டை என்பவற்றை முன்னிறுத்தி பயண அனுமதியை இரத்து செய்வது கட்டாயமானதாகும். அப்பாவி பொதுமக்களுக்கு இடைஞ்சல் செய்வது குறைக்கப்பட வேண்டும் என்கிறார் பவளம்மா.

எவரின் கருத்து எப்படி இருந்தாலும் பயண அனுமதி பெறுதல் - பயணம் செய்தல் என்ற நெடுந்துயர் யாழ்ப்பாண மக்களை தொடர்ந்தும் வருத்தவும், வதைக்கவுமே செய்கிறது. இதுவே நிஜம்.

# இம்முறை தமிழக முகாம்களில் க.பொ.த.(சா/த) பரீட்சை இல்லை

(கொழும்பு)

பெரும்பாலான மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு முன்வராததால் இம்முறை பரீட்சை நடத்தப்படமாட்டாது என இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் ஈழத் தமிழர்களைக் கண்காணிக்கும் ஈழம் புனர்வாழ்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

பெரும் பாலான மாணவர்கள் பரீட்சை எடுக்கும் மன நிலையில் இல்லையென அந்த அமைப்பு கூறியுள்ளது. எனினும் மாணவர்கள் பரீட்சை எழுது வதற்கு விரும்பி முன் வந்தால் பரீட்சைக் கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கத் தயார் என ஈழம் புனர் வாழ்வு அமைப்பின் பேச் சாளர் தெரிவித்துள்ளார்.

ஈழத்திலிருந்து இடம்பெயர்ந்து தமிழகத்தில் தங்கியிருக்கும் மாணவர்கள் கோரும் பட்சத்தில் அவர்கள் க.பொ.த.சாதா ரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக சென்னையிலுள்ள பிரதி உயர்ஸ்தானிகர் ஹம்சா கூறியுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் தமிழகத்திலுள்ள இலங்கை மாணவர்கள் 60 பேர் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிருந்ததுடன் 2006ஆம் ஆண்டு 100 மாணவர்கள் சோத னைக்குத் தோற்றியிருந்தனர். இதில் 26 பேர் உயர் தரம் பயில்வதற்குத் தகுதி பெற்றிருந்தனர். ஓ

# அனர்த்தங்களில் மரணிக்கும் எம்.பிக்களுக்கு நஷ்ட ஈடு அதிகரிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தாக்குதல்களாலோ அல்லது திடீர் அனர்த்தங்களாலோ மரணிக் கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டை 50 இலட்சம் வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

இதுவிடயமாக பாராளுமன்ற அலுவல் கள் அமைச்சர் எம்.எச். முகம்மது முன் வைத்த கோரிக்கையை அமைச்சரவைக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

மேற்படி காரணங்களால் மரணிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது நஷ்ட ஈடாக 10 இலட்சம் வழங்கப்படுகின்றது. இத்தொகையை 50 இலட்சம் ரூபா வரை அதிகரிக்கும் நோக்கில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சுக்கு நிதி ஏலவே ஒதுக்கப் பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இது வரையிலும் பயங்கரவாத தாக்குதல் அல்லது திடீர் அனர்த்தங்களால் மரணிக்கும் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கென ஒருகோடி ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக் கப்படும் போது மருத்துவ காப்புறுதியாக இரண்டு இலட்சம் வரை அதிகரிக்கவும் அமைச்சரவை குழு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது. ஓ

### இந்திய அரசு மருந்து , உணவுப்பொருள் அனுப்புவது

# ஈழத்தமிழர்களை பட்டினி கிடந்து சாகாதே நன்கு சாப்பிட்ட பின்னர் சா என்பதற்கா?

## கம்யூனிஸ்ட் கட்சியின் ஜனசக்தி நாளிதழ் கேள்வி

(கொழும்பு)

தமிழ் நாட்டின் முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ள இலங்கைத்தமிழர் நிவாரண நிதி திரட்டல் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ தமிழ் நாளிதழான ஜனசக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

இக்கட்டான நேரத்தில் உதவிக்கரம் நீட்டுவது நமது இன்றியமையாத கடமையாகும். ஈழத்தில் வேதனையால் விழிநீர் பெருக்கி வாடிக்கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளுக்கு தமிழக மக்கள் இயன்றதை வழங்கி உதவிடுவீர் . இலங்கைத் தமிழர் நிவாரண நிதிமுதல்வர் கலைஞர் 10 இலட்சம் ரூபாய் வழங்கினார் . 29.10 .2008 முரசொலியின் முதல் பக்கத்தில் வெளிவந்துள்ள வரிச்செய்திகள் இது முதல்வரின் ஏடு. வேண்டுகோளும் முதல்வரால் வெளியிடப்பட்டுள்ளது. கருணை உள்ளம் கொண்டு கண்ணீர் வடிப்போருக்கு உதவிட முற்படுவதைக் குறைகூறுவதே ஒரு பெரும் குற்றமாகும்.

ஆனால் இதற்குள் அரசியல் கேள்விகள் அடங்கியுள்ளன. நாங்களும் –நீங்களும் , சகோதர – சகோதரிகளுக்கு உதவி என்னும் போது புலிகளுக்கு உதவி என்பதும் கேட்கிறதா? தமிழ் நாட்டு மக்கள் இலங்கையில் பிறந்த ஒரே காரணத்தால் , பல்லாண்டு களாக வேட்டையாடப்பட்டுவரும் சகோதர சகோ தரிகளுக்கு இயன்ற உதவிகளைச் செய்ய எப்போதும் தயங்கியதே இல்லை.

விடுதலைப்புலிகள் மீது மட்டும் பாயும் குண்டும் , சுடும் துப்பாக்கியும் உண்டா? மக்களை கவசமாகப்பயன்படுத்துவதாக கூறுவோர் விமானக்குண்டுவீச்சுக்கு கவசம் கண்டு பிடித்துள்ளனரா? அரசியல் நெறி என்ற பெயரால் கொலைகாரர்களுக்கு துணைபோகலாமா? இலங்கைத் தமிழர்களான சகோதர–சகோதரிகளுக்கு ஏற்படும் இன்னல்களைத் தடுக்க இந்தியத் தமிழ் மக்கள் நேரில் சென்று உதவிட முடியாது.

எனவே தான் தமிழ் மொழி பேசும் இந்திய குடி மக்கள் இந்திய அரசிடம் சில வேண்டுகோள்களை முன்வைத்தனர்.

- இலங்கை அரசிடம் பேசி விமான, தரைப் படை தாக்குதலை நிறுத்தச் செய்யுங்கள்.
- இந்திய அரசு , எங்கள் சகோதர –சகோதரிகளை சுட்டுக்கொல்ல ,ஆயுதங்களை யும், இராணுவ வீரர்களையும் அனுப்புவதை நிறுத்த வேண்டும்.
- அகதிகள் ஆக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு இந்திய அரசு நிவாரணப்பொருட்கள் அனுப்ப வேண்டும். தமிழ் நாட்டு மக்கள் தரும் பொருளை அனுப்ப அனுமதி வேண்டும்.

மக்கள் இந்தவேண்டுகோள்களை வைப்பதற்கு முன்பே மத்திய அரசுக்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள இக்கட்டான நேரம் –அதற்குரிய காரணம் தெரியும். தெரிந்தும் எந்த முடிவையாவது நடவடிக்கையாவது எடுத்ததா?

அனைத்துக்கட்சிக்கூட்டம் அதில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி விலக நேரிடும் என்ற எச்சரிக்கைக்கு பின் வெளிவிவகார அமைச்சர் தமிழக முதல்வரைச் சந்தித்துள்ளார்.

போர் நிறுத்தப்படும் என்று கூறவில்லை. குண்டுகள் போடுகிற வானோடிகளை அனுப்ப மாட்டோம் எனக்கூறவில்லை. மத்திய அரசுக்கு ஆபத்தில்லை என்றே கூறினார்.

எனவே மத்திய அரசு தானாக மனிதாபிமானத்தால் உந்தப்பட்டு எதையும் செய்யவில்லை.

எனவேதான் முதல்வரின் நம் பிக்கை மக்களுக்கு ஏற்படவில்லை. இப்போது நன்கொடை வசூல் , தானம் , உதவி என்று தமிழக முதல்வர் தொடங்கியிருக்கிறார். இவை எப்படி அங்கு போய் சேரும்? யார் இதை அவதிப்பட்ட மக்களுக்கு வழங்குவது? மத்திய அரசு இலங்கைக்கு தொடர்ந்து இராணுவ உதவி செய்வதால் இலங்கைத்தமிழ் மக்களை கொன்று குவிக்க துணை புரியும். டில்லியிடம் மன்றாட மக்கள் தயாராக இல்லை. அங்கிருந்து எந்த நற்காரியத்தையும் எதிர் பாக்க இயலவில்லை.

ஆனால் தமிழக முதல்வரிடம் ஒரேயொரு வேண்டுகோளுக்கு விடை கேட்கிறோம்.

- குண்டுத்தாக்குதலை நிறுத்தாமல் இருக்கும் போது அங்கு உதவிப்பொருட்களை எவ்வாறு கொண்டுசெல்லமுடியும்?
- சில மாதங்களுக்கு முன்னர் பழ.நெடுமாறன் மருத்துவப்பொருட்களை அனுப்பிவிட வசூலித்து வைத்த பின்னர் கேட்டபோது மறுக்கப்பட்டதே ஏன்? இப்போது எங்கிருந்து வழி பிறந்தது?
- இலங்கைத் தமிழர்களை கொல்பவர்களிடமே மருந்து, உணவுப்பொருட்களை விட கொடுமையான செயல் உண்டா? அவர்கள் கையால் தமிழ் மக்கள் வாங்கிச் சாப்பிடுவார்களா?

சர்ச்சைக்கு உட்படாத சமூகத் தலைவர்கள் நேரில் சென்று உணவு , உதவி வழங் கிட இலங்கை அரசும் இந்திய அரசும் மறுப்பது ஏன்?

எல்லாவற்றிற்கும் மேலாக குண்டு போட்டு கொல்லப்படுவது நிறுத்தப்படமாட் டாது எனத் திட்டவட்டமாக ராஜபக்ஷ பிரகடணம் செய்து விட்ட பின்னர் நீங்கள் கருணையுடன் அனுப்பும் பாலும் , பருப்பும் , பாகும், சைவ –அசைவ விருந்தாக அமைந்தாலும் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே சாகத்தானே வேண்டும். பட்டினி கிடந்து குண்டடிபட்டுச் சாகாதே நன்கு சாப்பிட்டுவிட்டு சா என்று கூறுவதாகத் தானே உங்களது அழைப்பு அமைந்துள்ளது.

முதலில் குண்டுப்போரை நிறுத்தச் சொல்லுங்கள் இல்லையேல் இதுவும் கொடை மடம் என்றே வருணிக்கப்பட நேரிடும். மத்திய அரசை காப்பதா ? இலங்கை தமிழ் மக்களை காப்பதா ? என்பதை முதல்வரின் முடிவுக்கே விட்டு விடலாம். இது கட்சியின் கோரிக்கை அல்ல.மக்களின் புலம்பல் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)


சேவைநலன் பாராட்டு விழா

உயர்திரு. பொ. அலிஸ்ரன் அருமைநாயகம்

(இலங்கை வங்கி உதவிப் பொதுமுகாமையாளர், வடபிராந்தியம்)



இலங்கை வங்கியின் இமாலய சாதனையாளன்
இனிய பிறந்த நாளிதனில் ஓய்வு பெறும் -தங்களை
சகல செல்வங்களுடன் சௌபாக்கியமாய் வாழ
வாழ்த்துகிறோம் வாழிய வாழிய பல்லாண்டு வாழியவே!

BANK OF CEYLON
BOC

ஊழியர்கள்
இலங்கை வங்கி
வடபிராந்தியம்.

61728

ஒரு மனிதனுக்கு நூறு நன்மை செய்து விட்டு ஒன்றைச் செய்யத்தவறினால் -அவன் எல்லா வற்றையும் மறந்து விட்டு தூற்றுவான்.

- யூக்கோஸ்லாவியா

வலம்புரி

## காந்திக்கு பரிசு கொடுத்த கோட்சேயும் இந்தியாவுக்கு பரிசளித்த ஜே.வி.பியும்

விடுதலைப் புலிகள் நடத்திய விமானத் தாக்குதல் மீளவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் விமானங்கள் அழிக்கப்பட்டு விட்டன என அரசு பிரசாரம் செய்து வரும் நிலையில் மீளவும் விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதல் நடத்தியமையானது,

★ விடுதலைப் புலிகளின் விமானங்கள் அழிக்கப்பட்டு விட்டன என்ற அரசின் பிரசாரம் பொய்யானதா?

★ விடுதலைப் புலிகள் எத்தனை விமானங்களை வைத்துள்ளனர்?

★ வன்னியில் போர் நடந்து கொண்டிருக்கும் போது, அங்கு பெரும் பகுதி இடங்களை இராணுவம் கைப்பற்றியதாக அறிவிக்கும் நிலையில், விடுதலைப் புலிகளின் விமானம் தாக்குதல் நடத்துவதும் தரையிறங்குவதும் எங்கே? எப்படி என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்தக் கேள்விகளின் மத்தியில் ஜே.வி.பி புதியதொரு சந்தேகத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்திய ராடர் கருவிகள் மீதும் அவற்றை இயக்குவோர் மீதும் சந்தேகம் உள்ளதாக ஜே.வி.பி கூறியிருப்பதே அதுவாகும்.

இங்குதான் காந்திக்கு பரிசு கொடுத்த கோட்சே போன்று ஜே.வி.பி இந்தியாவிற்கு பரிசு கொடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு ஆயுத உதவிகள், ராடர் வசதிகள், அவற்றை இயக்கும் வல்லுநர்கள் என பலதும் இந்தியாவால் வழங்கப்பட்டிருந்தது.

இந்த உண்மை விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல் மூலம் வெளிப்பட்டது.

இந்தியப் படையினரே விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்துக்கு உதவிவரும் உண்மை வெளிப்பட்டதும் இப்போது ஜே.வி.பி இந்தியா மீது பழிசுமத்தியுள்ளது.

அதில் விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதலுக்கு இந்தியாவே பின்னணி எனக் கூறப்படுகிறது.

எப்படியிருக்கிறது நிலைமை? இலங்கைப் படையினருக்கு உதவிய இந்தியா மீதே சந்தேகம் சுமத்தப்படுகின்றதெனில் பஞ்சசீலக் கொள்கையை உடைய இந்திய தேசத்திற்கு இது தேவையா? ஆம், கோட்சே, காந்தியை மட்டுமே சுட்டுக் கொன்றார்.

ஆனால் ஜே.வி.பி இந்தியாவின் ஜனநாயகத்தை -அகிம்சையை -கௌரவத்தை சின்னாபின்னமாக்கும் பழியை சுமத்தியுள்ளது. இப்போதாவது இந்தியா விழித்துக் கொள்ளுமா என்பது தெரியாவிட்டாலும் ஜே.வி.பியின் குற்றச்சாட்டு இலங்கை அரசுக்கும் -படைத்தரப்புக்கும் பலத்த சிக்கலை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

# இலங்கை இந்தியாவிற்கு அடங்குவதை நிறுத்தாவிடில் அரசாங்கத்தை கவிழ்க்க நடவடிக்கை எடுப்போம்

## -ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச



(கொழும்பு)

இலங்கை விடயத்தில் இந்தியா தலையிட்டிருப்பதால் வன்னியில் இலங்கை விமானப் படையினர் நடத்திவந்த வான் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு அல்லது குறைக்கப் பட்டிருப்பதாக ஜே. வி. பி. யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க குற்றஞ்சாட்டினார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவுக்குச் சென்று அந்நாட்டு வெளி விவகார அமைச்சர் பிரணாப் முஹர்ஜி உள்ளிட்ட முக்கியஸ் தர்களைச் சந்தித்திருந்தமையைச் சுட்டிக்காட்டிய அமரசிங்க இந்த விஜயத்தின் இறுதியில் வெளியிட்ட கூட்டறிக்கையின் பின்னணியில் முக்கிய விடயங்கள் உள்ளடங்கியிருப்பதாகக் கூறினார்.

அந்த அறிக்கையைப் வைத்துப் பார்க்கும்போது இலங்கை, இந்தியாவிடம் முழுமையாகச் சரணடைந்துள்ளமை தெளிவாகிறது. இரு நாட்டுக்குமிடையிலான ஒப்பந்தத்திற்கு அமையவே வன்னியில் விமானப் படையினரின் தாக்குதல்கள் குறைக்கப்பட்டு அல்லது நிறுத்தப்பட்டுள்ளன. மாறாக விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. என்று நேற்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டார். இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலையீடு அதிகரித் திருப்பதுடன் கடந்த காலங்களைப் பார்த்தால் அனைத்து விடயத்திலும் இலங்கை இந்தியாவிற்கு அடங்கிச் செல்வது தெளிவாக புலனாகிறது எனவும் இந்தச் சந்தர்ப்பத்தை இந்தியா சரியாகப் பயன் படுத்த வேண்டுமென அமெ ரிக்கா கூறியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை விடயத்தில் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தலையிட்டுள்ளன. இதற்கு ஆதரவு வழங்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகிறார். இவற்றை நிறுத் தாவிட்டால் அரசாங்கத் தைக் கவிழ்ப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் என்று சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

### விடுதலைப் புலிகள் பலமிழப்பதை இந்தியா விரும்பாது

விடுதலைப் புலிகள் தனிநாடு கோருவதை இந்தியா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாதபோதும், அவர்கள் பலமிழப்பதை இந்தியா விரும்பாது என ஜே .வி. பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தனி நாடு கோரினால் அது தமிழ் நாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அதனை இந்தியா ஒருபோதும் விரும்பாது என அவர் குறிப்பிட்டார். ஆயினும், விடுதலைப் புலிகள் பலமிழக்கச் செய்யப் பட்டு தோற் கடிக்கப்படுவதை இந்தியா ஒருபோதும் விரும்பாது எனவும் ரில்வின் சில்வா கூறினார்.

(ஓ)

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி-பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி தரம் II பகுதி I (Level II-part1), தரம் I (Level I) இற்கான மீள்பரீட்சைகள் டிசம்பர் மாதம் 20 ஆம் 21ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிபுத்திகதி நவம்பர் மாதம் 1ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கானவிண்ணப்படிவங்களை யாழ் பல்கலைக் கழக நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இலங்கை நூலகச்சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி ல.உமாசங்கர் அறிவித்துள்ளார். (ஓ-6)

## யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

டிசம்பர் மாதம் நடைபெறவுள் க.பொ.த.சாதாரண பரீட்சைக்கான கணிதபட மாதிரி வினாத்தாள்கள் யாழ். கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரிவால் தயாரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.வலயகல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பயிற்சி வினாத்தாள்களை சி.டீகள் மூலம் பிரதி செய்து அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்கி உதவுமாறு அதிபர்களை அவர் கேட்டுள்ளார். (5)

## யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடாத்தும் தடகளப்போட்டிகள்

யாழ் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடாத்தும் மாவட்ட ரீதியிலான தடகளப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணி வரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

300ற்கு மேற்பட்ட வீரவீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ள இப் போட்டியின் இறுதிப் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமைநடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷ், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ். பத்மநாதன், ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அதிபர் ஜே.ஏ. ஜேசுதாசன், எக்ஸ்போ ஏவியேஷன் முகாமையாளர் கே.வசீகரன், இலங்கை வங்கி யாழ். மேற்தரக்கிளைமுகாமையாளர் ஆர்.ஜெஜேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டிக்கு ஆர்வலர்கள் அனைவரையும்கலந்து கொள்ளுமாறு மெய்வன்மை சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

(ஓ-6)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 44

கோவில் அமைந்திருக்கும் சூழல் மனத்திற்குப் பரவசம் தருவது . அதனால் கோவிலுக்குச் செல்வது மட்டற்ற மகிழ்வைத் தரும். தேவாரப்பதிகங்களில் இத்தகைய கோயிற் சூழல்கள் விளக்கப்பட்டன. இயற்கை எழில் கொஞ்சும் சூழலில் பல கோயில்கள் அமைத் திருப்பதையும் தேவாரப்பதிகங்கள் பதிவு செய்துள்ளன. பல்லவர் காலத்தில் பெரிய கோவில்கள் கட்டப்பட்ட போது இயற்கைச் சூழலின் வளம் மிக்க பிரதேசங்களில அவை கட்டப்பட்டுள்ளன. வழிபாடு செய்யப்போகும் அடியவர்களுடைய மனதிலே அழகு பற்றிய ஆர்வத்தைத் தூண்ட இச் சூழல் பெரிதும் துணைசெய்தது. பூத்துக்குலுங்கும் மலர்களும் பச்சை மரச்செடிகொடிகளும் நீர்நிலைகளின் வள மும் மனிதக் குடியிருப்பு நிலைகளுக்கும் மேலான ஒரு பரவசம் தரும் பக்திச் சூழலை ஏற்படுத்தியிருந்தன.

மக்கள் கோயிலை நாடிச் செல்வதை ஒரு பயிற்சியாக்க எண்ணிய நாயன்மார்கள்கள் கோயிற் சூழலை நேரில் சென்று கண்டு அதைப்பாடலிற் பதிவு செய்தனர். அவர்கள் கோயிலுக்குச் சென்றபோது சூழலை ஊன்றிக் கவனித்தனர். கோவிற் பண்பாடு இயற்கையுடன் ஒன்றியிருப்பதை நன்கு உணர்ந்தனர். அழகும் தூய்மையும் நறுமணமும் மனிதரைக் கவரும் இயல்புடையவை. நாள் தோறும் அங்கு செல்லும் விருப்பத்தை ஏற்படுத்தும்.

கோயிற் சூழலைப்பாடும் போது பிறிதொருவிடயத்தையும் இப்பாடல்கள் மூலம் உலகிற்கு உணர்த்தியுள்ளனர். தமிழ் மக்களிடையே நிலவிய மலர்ப்பண்பாட்டு நடைமுறையையும் விளக்கியுள்ளனர். கோயிற் சூழலில் இயற்கை நிலையில் தோன்றியுள்ள மரங்களையும் செடிகொடிகளையும் அவற்றின் வளர்ச்சிநிலைகளையும் விளக்கியுள்ளனர். மலர்களின் தோற்றம், பொலிவு, நிறவேறுபாடு, மலரும் காலநிலை, நறுமணம் தேன்பிலிற்றும் நிலை என்பன பற்றிய செய்திக் குறிப்புகளைச் செந்தமிழிலே தந்துள்ளனர். இறைவனுக்குச் சாற்றுகின்ற மலர்களைப் பற்றியும் அவற்றின் ஒழுங்கமைதி பற்றியும் பல நுணுக்கமான செய்திகளைக் குறிப்பிட்டுள்ளனர். அவை மிகவும் பயனுடையவை.

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

சுந்தரரும் சம்பந்தரும் இளவயதினராதலால் இயற்கை அழகால் பெரிதும் கவரப்பட்டனர். எனவே கோவிற் சூழலை மனக் களிப்புடன் பாடியுள்ளனர். சுந்தரர் சம்பந் தரை விடத்தன்னை அழகுபடுத்துவதில் ஆர்வமுடையவர். அதனால் அவருடைய பாடல்களில் இயற்கை அழகு நுணுக்கமாக அமைந்திருக்கும். இயற்கையழகிற்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பதுநீர்வளமாகும். இந்த நீர்வளம் பற்றிச் சுந்தரர் குறிப்பிடும் போது காவிரியாற்றின் தோற்றத்தை நமது மனக்கண்ணில் முழுமையாகக் காணவைக்கிறார் தன்னை மறந்து நின்று பாடுகிறார்.

"மின்னுமாமேகங்கள் பொழிந்திழிந்தருவி வெடி படக்கரையொடுத் திரை கொணர்ந்தெற்றும்
அன்னமாங் காவிரியகன்கரை யுறைவாரடியிணை தொழுதெழு மன்பராமடியார்
சொன்ன வாறறிவார் துருத்தியார் கேள்விக்குடியுளாரடிகளைச் செடியனே னாயேன்
என்னை நான் மறக்குமாறெம் பெருமானை யென்னுடம் படும் பிணியிடர் கெடுத்தானை"

## அசாமில் பயங்கரம்

# 18 இடங்களில் தொடர் குண்டு வெடிப்பு 40 பேர் பலி; 200 பேர் படுகாயம்

(கவுகாத்தி)

அஸாமில் 18 இடங்களில் குண்டு வெடித்துள்ளது.

கவுகாத்தியில் கனேஷ்குரி பார்பெட்டா பொங்கைகான் உட்பட 18 இடங்களிலேயே குண்டு வெடித்துள்ளது.

இந்தகுண்டு வெடிப்பில் 36 பேர் உயிரிழுந்துள்ளனர். 70இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அனைத்து குண்டுவெடிப்புகளும் சுமார் 11.30 மணி அளவில் கூட்ட நெரிசல் மிகுந்த இடங்களில் வெடித்துள்ளன.

இதனால் பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. முதல் குண்டு கணேஷ்குரி பகுதியில் வெடித்தது. இரண்டாவது குண்டு மாவட்ட கோர்ட் வளாகத்திலும் 3ஆவது குண்டு பொலிஸ் நிலையம் அருகிலும் வெடித்துள்ளன.

அனைத்து குண்டுகளும் ஒரு சில நிமிட இடைவெளியில் வெடித்துள்ளன. அதிக அளவில் பெண்களும், குழந்தைகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். குண்டு வெடிப்பு சம்பவத்தை உல்பா தீவிரவாதிகள் நிகழ்த்தியிருக்கலாம் என கூறப்படுகிறது.

அசாம் மாநிலத்தில் உல்பா தீவிரவாதிகள் அடிக்கடி குண்டு வெடிப்புகளை நடத்தி நாச வேலையில் ஈடுபடுகிறார்கள்.

அரசு பல தடவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தும் ஆயுதங்களை கீழே போட மறுக்கும் அவர்கள் சமீப காலமாக வெடி குண்டு தாக்குதல்களை தீவிரப் படுத்தி உள்ளனர்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் 8 தடவை குண்டு வெடிப்பை நடத்தியுள்ளனர்.

மேலும் 14 சக்தி வாய்ந்த குண்டுகள் பர்பேடா பான் கைகான் காக்ராஜ்கர் மாவட்டங்களில் வெடித்தன. பகல் 11.30 மணி முதல் 11.45 மணி வரை இடை வெளிகளில் இந்த குண்டுகள் வெடித்தன.



அசாம் மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் மேலும் சில இடங்களில் குண்டுகள் ஆங்காங்கே வெடித்ததாக தகவல்கள் வந்தன. ஆனால் அது பற்றி உறுதி செய்ய இயலவில்லை.

தலைநகர் கவுகாத்தியில் வெடித்த 4 குண்டுகளும் மிக சக்தி வாய்ந்தவை அவை முக்கிய வீதிகளில் உள்ள மார்க்கெட்டுகளில் வைக்கப்பட்டிருந்தன.

இந்த 4குண்டு வெடிப் புகளில் சிக்கி நூற்றுக்கணக்கானோர் படுகாய மடைந்தனர்.


குண்டு வெடித்த வேகத்தில் வாகனங்கள் நொறுங்கி தீ பிடித்து எரிந்தன கணேஷ்குரி என்ற இடத்தில் நடந்த குண்டு வெடிப்பு மிக மோசமாக இருந்தது. குண்டு வெடித்த சந்தைகள் போர்க் களம் போல காட்சி அளித்தன.

கணேஷகுரியில் உள்ள மாவட்ட சந்தை குண்டுகள் வெடித்தது பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. (5)

### உயிர் பிரியும் நேரத்திலும் பயணிகளை காத்த டிரைவர்

(ஆமதாபாத்)

பஸ் ஓட்டிக் கொண்டிருக்கும் போது மாரடைப்பு வந்தாலும்; நிதானமாக பஸ்சை ஓரமாக நிறுத்தி அதிலிருந்து 60 பயணிகளின் உயிரை காப்பாற்றி விட்டு தன் உயிரை விட்டார் டிரைவர் ஒருவர். ஆம தாபாத் மாநகர பஸ்சில் டிரைவராக பணி புரிந்தவர் அன்வர் அலி சயீது (வயது 57) நகரில் உள்ள வாத்தவா பகுதியில் வசிக்கும் இவர், சம்பவத்தன்று காலை 9.45 மணிக்கு குஜ ராத் ஐகோர்ட்டிலிருந்து லால் தர்வாசா செல்லும் 64ஆம் நம்பர் பஸ்சை ஓட்டிச் சென்றார். காஸ்திரி பாலத்தை பஸ் அடைந்த போது, சயீதுக்கு திடீரென நெஞ்சு வலி வந்தது.



அத்துடன் உடம்பு முழுவதும் வியர்த்து, கைகள் நடுங்க ஆரம் பித்தன. இதனால், பஸ்சின் ஓட்டத்தில் தடுமாற்றம் இருப் பதைக் கண்ட கண் டக்டர் ருக்னு தீன் மாலிக், டிரைவர் சயீது பக்கம் சென்று என்ன வென்று விசாரித்தார். உடன் அவரை அமைதியாக இருக்கும்படி கூறிய டிரைவர் சயீது, தனக்கு மாரடைப்பு வந்திருப்பதையும் அவரிடம் தெரிவித்தார்.

பயணிகளிடம் இது பற்றி தெரிவிக்க வேண்டாம். அவர்கள் பீதி அடைவார்கள் எனக் கூறிய அவர், கடும் வலி இருந்தாலும், தைரியமாக செயல்படத் துவங்கினார். பஸ்சின் வேகத்தை படிப்படியாக குறைத்த அவர் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், அதை பாலத்தில் ஒரு ஓரமாக நிறுத்தினார். அது போக்குவரத்து நெரிசலான நேரம் என்றாலும், யாருக்கும் எந்தப் பாதிப்பும், சிரமமும் ஏற்படவில்லை. அப்போதுதான் டிரைவருக்கு என்ன நிகழ்ந்தது என்பதை பயணிகள் அறிந்தனர். இந்த நேரத்தில் அந்த வழியாகச் சென்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர், அவசரகால சேவைக்கு போன் செய்து விபரம் தெரிவித்தார். இதன்பின், சயீது மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார். இருந்தாலும் பகல் 11.55 மணிக்கு அவரின் உயிர் பிரிந்தது. மன உறுதியுடன் செயல்பட்டு பஸ்சை ஓரமாக நிறுத்[illegible] சயீதுவை எப்படியும் காப்பாற்றி விடலாம் என நினைத்தோம். ஆனால், அதற்குள் அவரின் விதி முடிந்து விட்டது என்றார் கண்டக்டர் மாலிக். மரணம் அடைந்த சயீதுவுக்கு எட்டு மகள்கள் உள்ளனர். இரண்டு மகள்களுக்கு திருமணமாகி விட்டது. மூன்றாவது மகளுக்கு அடுத்த மாதம் திருமணம் நடக்க விருந்தது.


இந்நிலையில் சயீது மரணத்தை தழுவி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

### பாரதச் செய்திகள்

## பயங்கரவாதம் எனக்கூறி தமிழினத்தை அழிக்கும்

# இலங்கை அரசை போர்நிறுத்தம் செய்யச் சொல்லாது இந்திய அரசு

## விஜயகாந் தெரிவிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகவில்லை. இலங்கை தமிழர்கள் மீது பொழியும் குண்டுகள் மட்டும் இன்னும் நின்றபாடில்லை என்று தேசிய முற்போக்கு திராவிட கழக கட்சியின் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை அரசு தமிழ் பகுதிகள் மீதுவான் படைகள் மூலம் குண்டுமாரி பொழிகிறது. இதன் விளைவாக மருத்துவமனைகள், பாடசாலைகள், மாதா கோவில்கள், இந்து கோவில்கள் என்று பொது நிறுவனங்கள் மட்டுமல்ல பொதுமக்கள் வாழும் குடியிருப்புகளும் பலத்த உயிர்ச்சேதத்திற்கும் பொருட்சேதத்திற்கும் ஆளாகின்றனர். இதனாலேயே இலங்கை அரசு போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தினோம்.

ஆனால் இலங்கை அரசோ விடுதலைப் புலிகள் மீதுதான் தாக்குதல் நடத்தப்படுகிறது. என்றும் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக் கப்படவில்லை என்றும் ஒரு அப்பட்டமான பொய்யை கூறி வருகின்றது. இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் காரியமாகும்.

தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் கருணாநிதி 2 வாரங்களுக்குள் இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் இல்லை என்றால் தமிழ்நாட்டு நாடாளு மன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்றும் அனைத்து கட்சி கூட்டத்தில் அறிவித்தார். 2 வாரங்களும் ஓடிவிட்டன. போர் நிறுத்தமும் செய்யப்படவில்லை ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகவில்லை. இலங்கை தமிழர்கள் மீது பொழியும் குண்டுகள் மட்டும் இன்னும் நின்றபாடில்லை.

இருந்தும் இலங்கை அரசின் சார்பில் வந்த சிறப்பு தூதுவர் இந்திய அரசின் வெளியுறவுத்துறை மந்திரி பிரணாப் முகர்ஜியை சந்தித்தார். அதன் பிறகு பிரணாப் முகர்ஜி முதலமைச்சர் கருணாநிதியை அவரது வீட்டில் சந்தித்தார். இதில் முதலமைச்சருக்கும் திருப்தி. இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் திருப்தி. இலங்கை அரசுக்கும் திருப்தி. ஆனால் வீட்டையிழந்து, வாழ் விழந்து உயிருக்கு போராடும் லட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்களுக்கு திருப்தியா?

கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நடந்து கொண்ட விதத்தை நாம் பாராட்டுவதைவிட இலங்கை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வெகுவாக பாராட்டியுள்ளார். கருணாநிதி முதிர்ந்த அரசியல் வாதி என்றும் இலங்கையின் ஒருமைப் பாட்டிற்கும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண பாடு படுகிறார் என்றும் மத்திய அரசின் அனுமதி யோடு தங்கள் நாட்டிற்கு அவர் வரவேண்டும் என்றும் இலங்கை அரச தலைவர் வேண் டுகோள் விட்டதிலிருந்தே இலங்கை தமிழர் பிரச்சினையில் எத்தகைய மகத்தான பணியை கருணாநிதி ஆற்றியிருக்கிறார் என்பது தமிழக மக்களுக்கு நன்கு புரியும்.

இலங்கை அரசோ பயங்கரவாதத்தை ஒடுக்குகிறோம் என்ற பெயரால் இலங்கை தமிழினத்தை அழிக்கும் இந்திய அரசோ இலங்கை அரசை போர் நிறுத்தம் செய்யச் சொல்லாது தமிழக அரசோ இலங்கைத் தமிழர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும்.

ஜனநாயகத்தை காப்பாற்ற பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்று முழங்குகின்ற இலங்கை அரசு உண்மையிலேயே ஜனநாயகத்தை கடைப்பிடிக்கிறதா என்று சிந்திக்க வேண்டாமா? எல்லா மக்களுக்கும் சம உரிமைகளும் சம வாய்ப்புகளும் கொடுப்பது தான் ஜனநாயகம் புத்த மத குருமார்களின் மேற்பார்வையில் சிங்கள வெறியர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு ஜனநாயக முலாம் பூசுவதை எப்படி ஏற்க முடியுமா? இலங்கை அரசின் முக மூடியை கிழித்தெறிய வேண்டியதே தமிழ் மக்களின் கடமையாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகள் வழங் குவதைப் பொறுத்தவரை தேசிய முற்போக்குத் திராவிட கழகம் தன்னால் இயன்றதை மாவட்டந்தோறும் திரட்டி அந்தந்த மாவட்ட ஆட்சி தலைவர்களிடம் உதவிகளை ஒப்படைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ -5,6)

### இன்று புதுச்சேரியில் கடையடைப்புப்போராட்டம்

(சென்னை)

இலங்கைத்தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதைக்கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை புதுச்சேரியில் அனைத்துக்கடைகளும் மூடப்பட்டிருக்கும் என வணிகர் சங்கம் தெரிவித்துள்ளது.

புதுச்சேரி வணிக சங்க நிர்வாகி முகமது நியாம் செய்தியாளர்களிடம் இது தொடர்பா கக் கூறினார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு தலையீட்டு இலங்கை அரசு போர்நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியே இந்த கடையடைப்புப் போராட்டம் நடக்கவுள்ளது என அவர் தெரிவித்தார். (ஓ)








கனேடிய பல்கலைக்கழக சேவைகள் நிறுவனத்தின் பத்தாண்டு சேவைகள் நிறைவை முன்னிட்டு யாழ் கல்வி வலயத்துடன் இணைந்து நடாத்திய விளையாட்டு நிகழ்வில், வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிமுகம் செய்து வைப்பதையும் உதைபந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டத்தில் சம்பியன் வென்ற, முறையே சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஆகியவற்றுக்கு, நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், வூஸ்க் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிட ப் பிரதிநிதி ஷீலா சவேஜ் ஆகியோர் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# காம்பீர், லக்ஸ்மன் இரட்டைச் சதம்; இந்தியா முதல் இன்னிங்ஸில் 613

(டில்லி)

காம்பீர், லக்ஸ்மனின் சிறப்பான இரட்டைச்



சதத்தின் மூலம் இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை யிழந்து 613 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி ஹைடன். ஹட்ரிச்சின் சிறப்பான ஆரம்பத்தின் மூலம் நேற்றய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 50 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி, 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது.

இதில் முதலாவது போட்டி சமனிலையாக இரண்டாவது போட்டியில் வெற்றிபெற்று இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் டில்லியின் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றுமுன்தினம் முதல் நாள் ஆட்ட நேரமுடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 296 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு காம்பீர்- லக்ஸ்மன் ஜோடி சிறப்பானஇணைப் பாட்டத்தை வழங்கியது.

ஆரம்ப முதலே சிறப்பாக துடுப்பெடுத்தாடிய காம்பீர் 150 ஓட்டங்களைக் கடக்க இந்திய அணி 300 ஓட்டங்களைக் கடந்தது.

**லக்ஸ்மன் சதம்**

இந்தஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 200 ஓட்டங்களை எடுத்து இந்திய அணியை தூக்கி நிறுத்தினர்.

இதில் சிறப்பாக ஆடிய லக்ஸ்மன் தனது 13ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.


தொடர்ந்து சிறப்பாக ஆடிய இந்த ஜோடியைப் பிரிக்க அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சாளர்கள் போராடினார்கள்.

**காம்பீர் இரட்டைச்சதம்**

ஒரு முனையில் நிலைத்து நின்று அதிரடியாக ஆடிய காம்பீர் தனது முதலாவது இரட்டைச்சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

எனினும் காம்பீர் 380 பந்துகளில் (26 பவுண்டரிகள் ஒரு சிக்ஸ் உட்பட) 206 ஓட்டங்களை எடுத்த போது வோட்ஷனின் பந்து வீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 5ஆவது விக்கெட்டுக்காக லக்ஸ்மனுடன் ஜோடி சேர்ந்த கங்குலி 5 ஓட்டங்களை மாத்திரமே எடுத்த நிலையில் ஹட்ரிச்சின் பந்து வீச்சில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



அடுத்து களமிறங்கிய தோனி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தார்.

எனினும் தோனியும் 29 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 27ஓட்டங்களை எடுத்தபோது வோட்ஷனின் பந்து வீச்சில் விக்கெட்காப்பாளர் ஹடினிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

**லக்ஸ்மனுடன் இணைந்தார் கும்பிளே**

தோனி ஆட்டமிழக்க இந்திய அணி 481 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுக்களை யிழந்த நிலையில் 7-வது விக்கெட்டுக்காக லக்ஸ்மனுடன் ஜோடி சேர்ந்தார் அணித் தலைவர் அனில் கும்பிளே.

இந்த ஜோடி சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை குவிக்க இந்திய அணி 500 ஓட்டங்களைக் கடந்தது.

**அரைச் சதத்தை தவற விட்ட கும்பிளே**

7-வது விக்கெட்டுக்காக இந்த ஜோடி98 ஓட்டங்களை எடுத்தபோது அணித்தலைவர் கும்பிளே 48 ஓட்டங்களுடன் ஜோன்ஸனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்ட மிழந்து அரைச்சதம் பெறும் வாய்ப்பை தவற விட்டார்.


**லக்ஸ்மனும் இரட்டைச் சதம்**

தொடர்ந்து களமிறங்கிய சகீர்கான் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணி 600 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் சிறப்பாகத் துடுப் பெடுத்தாடிய வி.வி.எஸ்.லக்ஸ்மனும் இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி அதன் முதலாவது இனிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 613 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ஆட்டம் இழக்காமல் வி.வி.எஸ். லக்ஸ்மன் 200 ஓட்டங்களையும் சகீர்கான் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஜோன்ஸன் 3 விக் கெட்டுக்களையும் வோட்டின் 2 விக்கெட்டுக்களையும்



மற்றும் பிரெட்லி, ஹட்டிச் ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

**அவுஸ்திரேலியா சிறப்பான ஆரம்பம்**

தொடர்ந்து தனது முதலா வது இனிங்சில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்குஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹைடன், ஹட்டிச் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 50 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் ஆட்டமிழக்காமல் ஹட்டிச் 29, ஹைடன் 16ஓட்டங்களை எடுத் திருந்தனர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)


## வீடு வாடகைக்கு தேவை

அரசாங்க ஆயுள்வேத வைத்தியசாலை இயங்குவதற்காக யாழ். பிரதேச செயலகப்பிரிவில் போக்குவரத்து உள்ள பிரதான வீதிகளில் அமைந்துள்ள சகல அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு தேவைப்படுகின்றது.

**பிரதான வீதி, கொட்டடி பகுதிகள் விரும்பத்தக்கது.**

தொடர்புகளுக்கு :-கணக்காளர்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,
வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1753) தொலைபேசி .இல:- 021 222 6253


# பொன் அணிகளின் உதைபந்தாட்டம் இன்று சென்.பற்றிக்ஸ் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாண கல்லூரியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதும் உதைபந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

கடந்த 90 வருடமாக வடக்கின் இவ்விரு பொன் அணிகளும் சிநேகபூர்வமாக மோதிக் கொண்டாலும் 1981ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணக்கல்லூரி அதிபராக இருந்த பிக்னல் அவர்களின் ஞாபகார்த்தமாக பிக்னல் வெற்றிக் கேடய உதைபந்தாட்ட போட்டியாக நடாத்தப்பட்டு வருகின்றது.

1981ஆம் ஆண்டு பிக்னல் அவர்களின் மகன் அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணக்கல்லூரிக்கு வருகைதந்து இவ் வெற்றிக்கேடய உதைபந்தாட்ட போட்டியினை தொடக்கி வைத்தார்.

இன்று வரை வடக்கின் இவ்விரு பொன் அணிகளும் இவ் வெற்றிக்கேடயத்துக்காக சிநேகபூர்வமாக மோதிவருகின்றன.

இறுதியாக இவ்வெற்றிக்கேடயம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியிடமே இருக்கின்றது. இன்றைய இவ் உதைப்பந்தாட்டப் போர் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு ஓர் வரலாற்றுப் போர் ஆகும்.

இந்தப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி இக்கேடயத்தை தொடர்ந்து தம் பக்கம் தக்கவைக்குமா? அல்லது யாழ்ப்பாணக் கல்லூரி அணி வென்றெடுக்குமா? என்பது இன்று தெரியும். (5)

# ஈழத்தமிழருக்கு ஆதரவான உண்ணாவிரதப் போராட்டத்தில் ரஜனி, கமல் பேசாது பங்கேற்பர்



(சென்னை)

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக நாளை சென்னையில் நடைபெறவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்க ரஜனியும் கமலும் ஒரு நிபந்தனையுடன் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

உண்ணாவிரதத்தில் மைக் வைத்து பேசக் கூடாது என்பதே அந்த நிபந்தனை. கிட்டத்தட்ட இதே நிபந்தனையை தமிழக அரசும் விதித்துள்ளது.

பெரிய நடிகர்கள் என்ன பேசினாலும் அது அரசியலாக்கப்படுவதால், இந்த முறை இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக, நாளை நடக்கும் உண்ணாவிரதப் போராட்டத்தில் மைக் வைத்து பேசுவதையே அடியோடு தவிர்த்து விட்டால் என்ன? என நடிகர் சங்கத் தலைவர் சரத்குமாருக்கு யோசனை தெரிவித்துள்ளனர்.

கமலஹாசன்,ரஜனிக்கும் இந்த யோசனை சரியாகப்படவே பேசச்சொல்லி வற்புறுத்தாதீர்கள் என்ற நிபந்தனையோடு உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்கச் சம்மதித்துள்ளதாக நடிகர் சங்க நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

அஜித், விஜய் போன்ற நடிகர்களும் இந்த வகை பேசா உண்ணாவிரதப் போராட்டம் பிரச்சினை இல்லாதது என நடிகர் சங்க நிர்வாகிகளிடம் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதைவிட முக்கியமான விடயம் நடிகர் சத்தியராஜை அடக்கி வாசிக்குமாறு தமிழக முதல்வரிடமிருந்தே அறிவுரை வந்திருப்பதாக நடிகர் சங்கம் தரப்பில் கூறப்படுகிறது.

பிரச்சினைக்குரிய விவகாரம் குறித்தும் நடிகர்கள் பேசவேண்டாம் என்றும் உணர்வைத் தெரிவித்தால் மட்டும் போதும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில் மத்திய அரசுக்கு பிரச்சினை ஏற்படுத்தும் வகையில் இனித் தமிழக அரசு நடந்து கொள்ளாது என சமீபத்தில் முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே இந்த அறிவுரை அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ச-5)

## மக்கள் மீதான...

வீச்சின்போது அப்பிரதேசத்தில் அமைந்திருந்த இரு முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறுவர்களும் வள்ளிபுனம் கனிஷ்ட/ உயர் தர மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் பயப்பீதியினால் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இப்பாடசாலை மாணவர்கள் பதுங்கு குழிக்குள்ளும்.வீதியோரங்களிலும் பற்றைகளுக்குள்ளும் பாதுகாப்புத்தேடி விழுந்து படுத்தனர்.

இலங்கை அரசு, இந்திய மத்திய அரசிற்கும் தமிழ்நாட்டிற்கும் மக்கள் மீது தாக்குதல்களை தாம் மேற்கொள்வதில்லை எனக் கூறி ஒரு சில நாட்களுக்குள்ளேயே மக்கள் குடியிருப்புக்களான பரந்தனிலும் வள்ளிபுனத்திலும் கண்மூடித்தனமான வானூர்தி குண்டுவீச்சுக்களை நடத்தியுள்ளது.

அத்தோடு கிளிநொச்சி பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீதும் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்களையும் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் பல மக்கள் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் வீடுகள் சேதமடைந்தும் உள்ளன. அரசின், தமிழ் மக்கள் மீதான கண்மூடித்தனமான வானூர்தி குண்டு வீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று அதில் மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## நாச்சிக்குடா...

ஜயபுரம் பகுதியைக் கைப்பற்றி அதனூடாக நாச்சிக்குடாவை அடைந்து அப்பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளது.

இப்பிரதேசத்தில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடந்த 17ஆம் திகதி முதல் ஆரம்பமான உக்கிர மோதல்களில் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன.

இப்பிரதேசம் படையினரிடம் வீழ்ந்ததால் புலிகள் மேற்குக் கரையில் தமது கட்டுப்பாட்டை முழுமையாக இழந்துள்ளனர் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-5)

## வள்ளிபுனத்தில்...

மாணவன் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஒருவர் காயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நுழைந்த வான் படையின் இரண்டு மிக்-27 ரக விமானங்கள் வள்ளிபுனம் பகுதியில் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளது.

இதில் மாணவன் ஒருவர் உடல் சிதறிய நிலையில் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வராசா சதீஸ்கரன் (வயது 15) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மத்தியகல்லூரியைச் சேர்ந்த மாணவியும் வள்ளிபுனத்தில் வசித்து வந்தவருமான பத்மநாதன் நிவேதினி (வயது 17) என்பவர் காயமடைந்துள்ளார்.

இத் தாக்குதலில் பொதுமக்களின்10 வீடுகளும் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## அஸ்ஸாமில் தொடர்...

மேற்பட்ட, மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதிகளில் குண்டு வெடிப்புக்கள் நடந்துள்ளன.

குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து பொதுமக்கள் பல இடங்களில் வன்முறையில் ஈடுபட்டார்கள்.

பொலிஸ்ார் மீதும் பொலிஸ் மற்றும் தீயணைப்புத்துறை வாகனங்கள் மீதும் மக்கள் கல்வீசித் தாக்குதல் நடத்தினார்கள். தீயணைப்புத்துறையினரும் பொலிஸாரும் உதவி செய்யவில்லை என்று பொதுமக்கள் புகார் கூறினார்கள்.

பெரும்பாலான குண்டுகள் கார்களி[ல்] வைக்கப்பட்டிருந்ததாகவும்,உல்ஃபா அமை[ப்] பைத் தவிர வேறு யாரும் இதைச் செய்திருக்க வாய்ப்பில்லை என்றும் தெரிவித்தார் அ[ஸ்]ஸாம் மாநில பொலிஸ் தலைவர் ஆர்.எ[ன்.] மாதூர்.

ஆனால் உல்ஃபா அமைப்பு வெளியி[ட்]டுள்ள ஓர் அறிக்கையில், தங்களுக்கு இ[ன்]றைய சம்பவங்களில் எந்தவிதத் தொடர்[பும்] இல்லை என்று கூறியுள்ளது. (முன்னர் வ[ந்த] செய்தி உள்ளே). (ச-

## புலிகளின் விமானத்...

இந்த சேதங்களால் மின்சாரம் அதிகம் பயன்படுத்தப்படும் மாலை 6 மணிமுதல் 9 மணிவரையான நேரப்பகுதியில் மின்சார விநியோகத்தில் பாதிப்பு ஏற்படலாம் எனவும் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் நாளாந்தம் 24 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் மின்சார சபை வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்து.

நூறு மொகாவாட்ஸ் மின்சாரத்தை வழங்கும் பெற்றோலிய வாயு மற்றும் நீராவி இயந்திரங்கள் உள்ளபகுதியை மீளமைப்பதற்கு குறைந்தது மூன்று மாதங்களாவது தேவைப்படுமென அந்த இணையச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் நாடளாவிய ரீதியிலான மின் விநியோகத்தில் 435 மெகாவாட்ஸ் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக மின்சார சபை பொறியியலாளர்களை மேற்கோள்காட்டி அந்த இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை களனி திஸ்ஸ மின் நி[லை]யத்தை புனரமைப்பதற்கு 6 மாதங்க[ள்] தேவை என மின்வலுத்துறை அமைச்[சர்] ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

எனினும் இதனால் மின் விநியோ[கத்]துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாதென அமை[ச்]சர் கூறியிருந்தார்.

இதேவேளை களனி திஸ்ஸ அனல் மி[ன்] உற்பத்தி நிலையத்தின் மீதான விமான[த்] தாக்குதலில் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனங்களில் ஒன்று முற்[றாக]வும் இன்னுமொன்று பகுதியாகவும் சே[தம]டைந்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்[சா]ளரும் மூத்த பொலிஸ் அத்தியட்சகருமா[ன] ரஞ்சித் குணசேகர தெரிவித்திருக்கின்றார். (ச

## விபத்தில் கொள்ள...

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய... வரிடமிருந்த பணப்பை, விபத்தின் பி... திருடிச்செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் ... நாவலர் வீதியும் இராசாவின் தோட்டவீ... இணையும் சந்தியில் இடம்பெற்றுள்... மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் செ... நல்லூர் நாயன்மார் வீதியைச் சேர்ந்த க... பொடிவிஜயராஜா (வயது 52) என்பவரின் ப... பையே திருட்டுப் போயுள்ளது. (ச-13

## பயிற்சி முகாம்...

6 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருந்... இந்த முகாம்கள் மீது நேற்றுக்காலை ... மணியளவில் ஜெட் விமானங்கள் தாக்குத[ல்] நடத்தியுள்ளன.புலிகளின் புலனாய்வ[ு] பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானின் பிரத்... யேக மேற்பார்வையின் கீழ் இந்த முகா[ம்] செயற்பட்டு வந்துள்ளதாகவும் விமான[ப்] படைப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ச-

## இலங்கையில்...

தாம் தயார் என தமிழக முதல்வர் மு.க[ரு]ணாநிதி தெரிவித்துள்ளார் இலங்கையி[ல்] சமாதானத்தை உருவாக்க இந்திய மத்தி[ய] அரசின் செயற்பாடுகளோடு நாம் ஒத்[து]ழைக்க வேண்டும் என்பதில் தமிழக அரசுக்[கு] எந்த கருத்து வேறுபாடும் கிடையாது.

சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் பேச்[சு]வார்த்தை மேசையில் அமர்ந்து பேசுவத[ன்] மூலம் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதற்கு இந்தியாவும், இந்தியா[வுடன்] இணைந்து தமிழ் நாடும் ஒத்துழைக்க ... ராக இருப்பதாக தமிழக முதல்வர் கருணா[நிதி] மேலும் தெரிவித்துள்ளார். (ச-


# மரண அறிவித்தல்

## சின்னத்துரை திரேசம்மா

### (மனோன்மணி)



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை திரேசம்மா (மனோன்மணி) நேற்று (30.10.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசஸ்-செல்லம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் பாசமிகு மனைவியும், தங்கத்துரை (பத்திரிகைக் காரியாலயம்,வலம்புரி), கீதா, றதா, ஜெயசீலன் (நோர்வே), விஜயசீலன் (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசஞானம் (ஆசிரியை Kilner Nursery), இன்பராஜா (கணக்காளர்), ஜீவா, றெஜி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான கண்மணி, அழகரட்ணம், பூபாலசிங்கம் மற்றும் குமார் (லண்டன்), அருள்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நிரூஜன் (World Vision), டிலக்ஷன், பானுரேகா (கனடா), பிரவீன், பிரசாத் (மாணவன் St.Patricks College), டில்றுக்ஷன், டில்ஷான், டித்ரிக், வியோலன், ஜெயோன், எறிக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,

காலஞ்சென்றவர்களான பெர்னாண்டோ, செபஸ்தியாம்பிள்ளை மற்றும் பூமலர், அமராவதி ஆகியோரின் மைத்துனியும், பயஸ், அருட்தந்தை ஏயின் சிலி றொஷான், தர்ஷிக்கா, நிஷாந்தன் ஆகியோரின் பெரிய தாயாரும்,

அழகேஸ்வரன், அழகேஸ்வரி, அழகுநாயகி, அழகுராணி, அழகுரேவதி, அழகேந்திரன், சுரேஸ், ரமேஸ், சாந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (01.11.2008) சனிக்கிழமை மாலை 3 மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'மனோஸ்தான்'
உயரப்புலம்
ஆனைக்கோட்டை.

தகவல்:
சி.அ.தங்கத்துரை
(மகன்)

(C-1755)



# அன்பொளி கல்வியகம்

யாழ்.இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

2009 இல் தரம் 4 (தற்போது தரம் 3) மாணவர்களுக்கான வகுப்புக்க[ள்] ஆரம்பமாகின்றன.

*காலம்:- 05.11.2008 புதன்கிழமை பி.ப. 3 மணி*

அனுமதிகளை 01.11.2008 சனிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வ[ரை] முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள்.

இயக்குநர்.

(C-1754)



# அன்பொளி கல்வியகம்

யாழ்.இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை -2008 சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வியகத்தில் கல்வி கற்றுச் சித்தியடைந்த மாணவர்களு[க்]கான பரிசளிப்பு நிகழ்வு 08.11.2008 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்[கு]ம் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குந[ர்].

(C-1754)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்